# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

## ஆண்டறிக்கை- 2012

## தனிச்சிறப்பு

## நிலையை

## நோக்கி...



# ஆண்டறிக்கை
# 2012

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

தயாரிப்பு:
சுகாதார தகவல் பிரிவு
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை
முழு பதிப்புரிமை பெற்றது © 2013

මෙය හිස්ව තැබූ පිටුවකි.

# பொருளடக்கம்

**1. கூட்டிணைந்த தகவல்கள்**

1.1 வரலாற்று விடயங்கள் 6

1.2 கூட்டிணைந்த நிருவாகம் 7

1.3 எமது திருப்புமுனை 8

1.4 தொலைநோக்கு, செயற்பணி 11

1.5 எமது பலம் 12

1.6 எமது எதிர்பார்ப்புகள் 13

1.7 எமது சாதனை 14

**2. முகாமைத்துவ குழு**

2.1 தலைவரின் செய்தி 20

2.2 பணிப்பாளரின் செய்தி 21

2.3 பணிப்பாளர் சபை 22

2.4 முகாமைத்துவ குழு 23

2.5 நிபுணத்துவ மருத்துவர்கள் 24

**3. தொழிற்பாட்டுத் தகவல்கள்**

3.1 செயலாற்றுகை 28

3.2 துறைசார் மீள்நோக்கு 29

**4. நிதி அறிக்கைகள்**

4.1 ஐந்தொகை 59

4.2 வருமான கூற்று 60

4.3 நிதி ஓட்ட கூற்று 61

4.4 கணக்குகளுக்கான குறிப்புகள் - 2012 62

4.5 பத்துவருடகால பொழிப்பு 70

4.6 முக்கிய கணக்கிடல் கொள்கை 71

4.7 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 74

# 1. கூட்டிணைந்த தகவல்கள்



# 1.1 வரலாற்று விடயங்கள்



இலங்கையின் முதலாவது சனாதிபதியாகிய அதிமேதகைய ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களின் கோரிக்கையின் பேரில் ஜப்பான் குடியரசினால் இலங்கை பிரசைகளுக்காக வழங்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை, இலங்கை சனாதிபதியினாலும் ஜப்பான் குடியரசை பிரதிநிதித்துவப்படுத்தி மாண்புமிகு இஷிமக்சூ கித்தகாவா அவர்களினாலும் 1984 செப்ரெம்பர் 17 ஆம் திகதியன்று விழாக்கோலமாக திறந்து வைக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டது. ஏனைய அரசாங்க மருத்துவமனைகளுடன் ஒப்பிடும்போது, சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை சேவைகளை ஏற்றுக் கொள்ளத்தக்க விலையில் மக்களுக்கு வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது

முன்னாள் மகளிர் விவகார, போதன வைத்தியசாலைகள் அமைச்சராகிய சுனேத்திரா ரணசிங்க அவர்களினால் 1985 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி நியமிக்கப்பட்ட மருத்துவமனையின் முதலாவது பணிப்பாளர் சபை, மருத்துவர் ஆர்.பீ.ஜே.பீரிஸ் (தலைவர்), மருத்துவர் டி.டி.சமரசிங்க (அமைச்சின் பிரதிநிதி), திரு.எஸ்.பி.சந்திரதாச (நிதி அமைச்சின் பிரதிநிதி), திரு,கே.என்.சொக்சி (சனாதிபதி சட்டத்தரணி), திரு.எம்.ரீ.பெர்ணான்டோ (பட்டயம் பெற்ற கணக்காளர்), மருத்துவர் எஸ்.கே.கப்ரால் (பணிப்பாளர் - மருத்துவ பட்டபின் படிப்பு நிறுவனம்), திரு.கே.டி.எல்.ரத்னசேன (செயலாளர்) ஆகியோர்களைக் கொண்டிருந்ததோடு, முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டமானது 1985 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

1984 திசெம்பர் 12 ஆம் திகதியன்று உடற்கூறு நிபுணத்துவ மருத்துவர் எச்.எச்.ஆர்.சமரசிங்கவின் பொறுப்பின்கீழ் மருத்துவமனைக்கு முதலாவது நோயாளி அனுமதிக்கப்பட்டதோடு, நிபுணத்துவ அறுவைச் சிகிச்சை மருத்துவர் திரு.கே.யோகேஷ்வரன் நிபுணத்துவ உணர்விழப்பு மருத்துவர் கே.பெரேராவின் ஒத்தாசையுடன் 1985 சனவரி மாதம் 12 ஆம் திகதியன்று முதலாவது அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. 1985 சனவரி 18 ஆம் திகதியன்று மருத்துவமனையில் முதலாவது மகப்பேறு நிபுணத்துவ பெண் நோயியல், மகப்பேறு மருத்துவர் கிங்ஸ்லி த சில்வாவின் மேற்பார்வையில் நிகழ்ந்தது.

இலங்கையில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளை விரிவுபடுத்துதல், மருத்துவ பட்டம், பட்டப்பின் படிப்பு உட்பட பிற சுகாதார சேவைகள் போன்றவற்றுக்கான பயிற்சி நிலையமொன்றாக செயற்படும் நோக்கத்தைக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டது. மருத்துவமனை செயற்பாடுகளின் கட்டுப்பாடு முகாமைத்துவ குழுவுக்கு கையளிக்கப் பட்டுள்ளதோடு, பணிப்பாளர் சபையினால் கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. மருத்துவமனையின் செயற்பாட்டுப் பணிகள், மூலதனச் செலவுகள் என்பவற்றுக்கு பொது திறைசேரியின் மானியம் மற்றும் மருத்துவமனையின் வருமானம் என்பன உபயோகப்படுத்தப் படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை, 28 வருடங்களுக்கு மேலாக சிகிச்சை சேவையையும் நவீன மருத்துவ வசதிகளையும் வழங்கி முன்னேற்றமடைந்துள்ளது.

# 1.2 கூட்டிணைந்த நிருவாகம்

பொது திறைசேரியின் பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "பகிரங்க தொழில்முயற்சிகளுக்கான கூட்டிணைந்த நிருவாகத்தின் சிறந்த தொழில்முயற்சி சேவை" என்னும் கைநூல் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டுகின்றது. மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்த இதுவரை நியமிக்கப்பட்ட சபைகள் இந்த கோவையிலுள்ள கோட்பாடுகளை செயற்படுத்தியுள்ளன.

## மருத்துவமனையின் பணிப்பாளர் சபையும் உறுப்பினர்களும்.

அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு (08) உறுப்பினர்களையும் உத்தியோகபூர்வமாக நியமனம் பெறும் மூன்று (03) உறுப்பினர்களையும் இந்த மருத்துவமனை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களும் அத்துடன் நாளாந்த நிருவாக பணிகளுக்காக முகாமைத்துவ குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களும் நடைமுறைப்படுத்தப்படுவது மருத்துவமனை பணிப்பாளரினாலாகும். மருத்துவமனை பணிப்பாளர் சபைக்கு காலத்துக்குக் காலம் தேவையான கட்டளைகளை விடுப்பதற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சட்டத்தின் ஒன்பதாம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மருத்துவமனையின் நாளாந்த நிருவாக பணிகளில் ஈடுபடாதுவிட்டாலும், மருத்துவமனையின் தொழிற்பாடு தொடர்பில் கிட்டிய மேற்பார்வை மற்றும் மீள்நோக்கு பணிகளில் ஈடுபடுவர். பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் இருவர் பொருள் மற்றும் சேவை கொள்வனவு சபை உறுப்பினர்களாகவும் ஒருவர் வரவுசெலவுத் திட்ட மற்றும் நடைமுறைப்படுத்தல் குழுவின் உறுப்பினர் ஒருவராகவும் செயலாற்றுகின்றனர். கணக்காய்வு குழுவின் தலைவராக தலைமைவகிப்பது திறைசேரியின் பிரதிநிதியாவார்.

## சபை உறுப்பினர்களின் ஊதியம்

2003-01-01 ஆம் திகதியிடப்பட்டதும் PED 04 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தலைவரினதும் சபை உறுப்பினர்களினதும் ஊதியங்கள் வழங்கப்படுகின்றன.

## முகாமைத்துவ குழு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சட்டத்துக்கு அமைவாக மருத்துவமனை பணிப்பாளரின் தலைமைத்துவத்தின் கீழ் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதோடு, இதன் ஊடாக மருத்துவமனையின் நாளாந்த பணிகளின் நிருவாகமும் அதேபோன்று பணிப்பாளர் சபைக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கும் பணிகளும் நிறைவேற்றப்படுகின்றது.

## கணக்காய்வுக் குழு


பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள திறைசேரியின் பிரதிநிதியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த சபையின் நிறைவேற்றுதரமல்லாத வேறு உறுப்பினர்கள் இருவரைக் கொண்டு கணக்காய்வு குழு செயற்படுகின்றது. குழு செயலாளராக மருத்துவமனையின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் செயலாற்றுவார். கணக்காய்வு குழு கூட்டங்களில் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராக கலந்து கொள்வார்.

மருத்துவமனையின் நிதிப் பணிகளின் தொழிற்பாடு மற்றும் செயலாற்றுகை போன்ற விடயங்கள் சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உரிய ஊக்குவிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த கணக்காள்வு குழுவுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

## ஒழுக்கவியல் கோட்பாடும் சிறந்த செயல் வழக்கும்

பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் வழிகாட்டல்களாக பயன்படுத்தப்படுகின்றது.

# 1.3 எமது திருப்புமுனை



## 1984

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை இலங்கை சனாதிபதியும் ஜப்பான் குடியரசின் பிரதிநிதி மாண்புமிகு இஷிமக்சூ கித்தகாவா அவர்களும் 1984 செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று விழாக்கோலமாக திறந்து வைத்தனர்.

1984 திசெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் முதலாவது நோயாளி அனுமதிக்கப்பட்டார்.

## 1986

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையின் இணை தாதி கல்லூரி 1986 யூலை மாதம் 01 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.



## 1987

மருத்துவர் எச்.எச்.ஆர்.சமரசிங்கவினால் இலங்கையில் முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங்காணப்பட்டார்.

முதலாவது தொற்று கட்டுப்பாட்டு குழுவு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் தாபிக்கப்பட்டது.

## 1990

கண் மருத்துவ பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது. லேசர் சிகிச்சை பிரிவும் Visual field analyzer இயந்திரமும் தாபிக்கப்பட்டது.

கண், உளநோய், புற்றுநோய் சிகிச்சையளிப்பு ஆரம்பிக்கப்பட்டது.



## 1991

மருத்துவர் என்.யூ.குணசிங்கவினால் 1991 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியன்று முதலாவது அடைபட்ட பகுதியை விட்டு வேறொரு வழியில் குருதி செல்வதற்கான இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

பேராசிரியர் ஜே.ஆர்.குரேயினால் முதலாவது முதுகெலும்பு பக்கவாட்டு வளைவு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.



## 1993

குருதி சுத்திகரிப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1993 ஆகஸ்ட் மாதம் உடலினுள் உட்செலுத்தப்பட்ட கெமரா உதவியுடன் பித்தப்பை அகற்றும் அறுவை சிகிச்சை (Laparoscopic Cholecystectomy) முதற்தடவையாகச் செய்யப்பட்டது.

## 1994

எலும்புமுறிவுப் பிரிவும் இருதய நோய் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது

யோனிக்குழாய் மூலம் பரிசோதனை செய்யக்கூடிய Ultrasound Scanner இயந்திரம் இலங்கையில் முதன்முதலாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் தாபிக்கப்பட்டது.



## 1995

மருத்துவர் பி.ஏ.குணரத்ன, மருத்துவர் ஏ.டீ.கப்புருகே ஆகியோர் இலங்கையில் முறையாக Arterial Switch சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

## 1998

Fiber Optic Bronchoscope இயந்திரமொன்று தாபிக்கப்பட்டது.



## 2000

2000 நவெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று மருத்துவர் டீ.எல்.பியறிசியினால் முதல் சீறநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

## 2003

Mammography பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.



## 2006

2006 மார்ச் மாதம் நிபுணத்துவ மருத்துவ கவனிப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவமனையின் மனையிடத்தில் "அரசாங்க மருந்தக" கிளையொன்றும் தாபிக்கப்பட்டது.

## 2007

நரம்பு பிரிவு, நரம்பு அறுவை சிகிச்சை பிரிவு, மூட்டுவாதம் சம்பந்தமான பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன.



## 2009

சரும நோய் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

## 2010

நரம்பு அறுவை சிகிச்சைக்கான தீவிர கண்காணிப்பு பிரிவும் உளநோய் ஆலோசனைச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டன.




## 2011

தேசிய விளைவுப்பெருக்க பிரிவின் ஒத்துழைப்புடன் மருத்துவமனையில் S5 கருதுகோள் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

## 2012

சுகாதார கல்வி பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

மருத்துவமனை 2010/11 தேசிய உற்பத்தித்திறன் விருதினை (சீ பிரிவு) பெற்றுக் கொண்டது)

# 1.4 தொலைநோக்கு, செயற்பணி

## தொலைநோக்கு

தேசிய மற்றம் சர்வதேச சமூகத்துக்கு
உயர் மருத்துவ சேவைகளை
வழங்கும் தனிச்சிறப்புமிக்க
நிலையமொன்றாதல்.

## செயற்பணி

அர்ப்பணிப்புடனும் ஊக்கத்துடனுமான பதவியணியின் ஒத்தாசையுடன் தேசிய மற்றும் சர்வதேச சமூகத்துக்கு சேவைகளை வழங்கும், பட்டம், பட்டப்பின்படிப்பு மற்றும் ஆராய்ச்சி கல்வி வசதிகளை கொண்டதும், உயர் ஒழுக்கநெறி சார்ந்த தரம் வாய்ந்த நோயாளிகளுக்கான சிறந்த கவனிப்புச் சேவை வழங்கும் கட்டணம் அறவிடும் போதனா மருத்துவமனையாகவும் மூன்றாம்நிலை ஆற்றுபடுத்தல் நிலையமொன்றாகவும் மாறுதல்.

# 1.5 எமது பலம்

- சிறந்த தகைமைகளைக் கொண்ட அனுபவம் மிக்க, செயலாற்றல் கொண்ட அர்ப்பணிப்புடனான மருத்துவ, தாதி மற்றும் தொழினுட்ப பதவியினர்களைக் கொண்ட எமக்கு சுகாதார துறையில் நீண்டகால நற்பெயர் உள்ளமை.
- விசேட சுகாதார பணியை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற சட்டமொன்றினால் எமக்கு அதிகாரமும் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளமை (1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க)
- சகல வசதிகளுடனும் சிறந்த வடிவமைப்புடனும் கூடிய மருத்துவமனைக் கட்டடத்தொகுதி.
- நவீன மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள், உயர் இரசாயனகூட வசதிகளினால் நோயாளிகளுக்கான சிகிச்சை, பதவியினர் பயிற்சி, மருத்துவ கல்வி, ஆராய்ச்சி போன்றவற்றுக்கு கிடைக்கும் அளப்பரிய வசதி.
- பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நிதிப்பலமும் சுயாதீனமாக நிதிசார் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமும்.
- விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ மாற்று அறுவைச் சிகிச்சை கவனிப்பு சேவை, தனியார் மருத்துவசாலைகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கும் ஆற்றல்.



# 1.6 எமது எதிர்பார்ப்புகள்



- கூட்டிணைந்த திட்டத்துக்கு அமைவாக உலகளாவிய தரங்களுக்கு செல்லுதல்.
- நவீன மருத்துவ விஞ்ஞான உபகரணங்களை கொண்டிருத்தல்.
- மருத்துவமனை கட்டணங்கள் மக்களுக்கு ஏற்ககூடிய விதத்தில் இருத்தல்.
- சர்வதேச தரம்வாய்ந்த நோயாளர் கவனிப்பு சேவைகளை வழங்குதல்.
- மருத்துவ பட்டம் மற்றும் மருத்துவ பட்டப்பின்படிப்பு, பயிற்சி நிலையமொன்றாக செயலாற்றுதல்.
- சகல தரங்களுக்கும் போதுமான வினைத்திறனுடைய பதவியணியை கொண்டிருத்தல்.
- மக்களுக்கு ஏற்கக்கூடிய தொகையை அறவிட்டு வருமானம் ஈட்டுதல்.
- சுகாதார அமைச்சின் கீழ் சேவையாற்றிய பதவியினர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு மதிப்பளித்தல்.

# 1.7 எமது சாதனை

## 1. புதிதாக நிருமாணிக்கப்பட்ட சிறுநீரகப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் சீறுநீரகப் பிரிவு மிக உயர் சேவையை வழங்கும் பிரிவொன்றாகும். ஏற்கனவே வெற்றிகரமாக 150 க்கும் மேற்பட்ட சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் மேற்கொண்டுள்ள இந்த பிரிவு இலங்கையிலுள்ள சிறுநீரகப் பிரிவுகளுக்கிடையில் முதன்மை ஸ்தானத்தை கொண்டுள்ளது. 14 குருதி சுத்திகரிப்பு இயந்திரங்களைக் கொண்ட முழுமையான குருதி சுத்திகரிப்பு பிரிவும் இதில் அடங்கும். முன்பு சீறுநீரக நோய் காவறைத் தொகுதி மருத்துவமனையில் ஒரு இடத்திலும் குருதி சுத்திகரிப்பு பிரிவு வேறு ஓர் இடத்திலும் தாபிக்கப்பட்டிருந்தமையினால் நோயாளிகளுக்கான சிகிச்சையளிப்புக்கு சில தடைகள் காணப்பட்டன. இது பற்றி பரிசீலனை செய்ததன் பின்னர் நோயாளிகளுக்கு மிக தரம்நாய்ந்த சேவையொன்றை வழங்கும் நோக்கத்துடன் சீறுநீரக பிரிவும் குருதி சுத்திகரிப்புப் பிரிவும் சகல வசதிகளுடனும் புதிய கட்டிடமொன்றினால் மீண்டும் தாபிக்கப்பட்டது.

## 2. மருத்துவமனையின் வாகன தரிப்பிடத்தை விரிவுபடுத்துதல்

மருத்துவமனைக்கு வருமானத்தை ஈட்டித்தருவதில் வாகனத்தரிப்பிடம் முக்கிய இடத்தை எடுக்கின்றது. முன்னைய வாகன தரிப்பிடத்தில் வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நிறுத்த முடியுமானதென்பதனால் மருத்துவமனை மனையிடத்தில் நோயாளிகளுக்கும் விருந்தினர்களுக்கும் வாகனங்களை நிறுத்தும்போது பல்வேறுபட்ட பிரச்சினைகள் எழுந்தன. அத்துடன் மருத்துவமனைக்கு வெளியே வெளியாரினால் நடாத்திவந்த விலைகூடிய வாகன தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கும் அவர்களுக்கு நேரிட்டது. வாகனத் தரிப்பிட கருத்திட்டத்தின் ஊடாக மருத்துவமனையின் வாகனத் தரிப்பிடத்தை நவீனமயப்படுத்தலும் விரிவுபடுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மிகக் குறைந்த விலைக்கு பாதுகாப்பாக மருத்துவமனை மனையிடத்திலேயே அவர்களுடைய வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதிகள் நோயாளிகள் மற்றும் விருந்தினர்களுக்கு உருவானது. இதேபோன்று கூடிய எண்ணிக்கையிலான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு இயலுமானமை மருத்துவமனைக்கு பணரீதியிலான நன்மை கிடைத்தது.

## 3. மருத்துவமனையின் வலையமைப்புடனான கணனி முறைமை

கணனி மயப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களுக்கான முறைமையொன்றை உருவாக்குவதற்கும் தகவல் தொழினுட்ப தொழிற்பாடுகளை செய்வதற்குமாக உட்கட்டமைப்பு வசதிகளும் அதேபோன்று தொழினுட்பமும் மிக முக்கியமானதாகும். இதில் மருத்துவமனையிலுள்ள சகல காவறைகளும், சிகிச்சை நிலையங்களும், தீவிர சிகிச்சை பிரிவும், அவசர விபத்துப் பிரிவும் , ஏனைய சகல பிரிவுகளும் ஒன்றிணைந்து சர்வதேச தரம் வாய்ந்த கணனி வலையமைப்பு முறைமையொன்று மருத்துவமனையில் தாபிக்கப்பட்டது.

இந்த வலையமைப்பு மூலம் சகல தரவுகளையும் வினைத்திறனுடனும் பாதுகாப்பாகவும் வைத்து கொள்வதற்கும் நடாத்திச் செல்வதற்குமான ஆற்றல் கிடைத்துள்ளது கணனி வலையமைப்புக்குரிய சேவையகம் (Server) மருத்துவமனையின் தகவல் தொலைத்தொடர்பு, தொழினுட்ப பிரிவில் தாபிக்கப்பட்டுள்ளதோடு, இது 24 மணித்தியாலமும் தொடர்ச்சியாக செயல்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

## 4. சுகாதார கல்விப் பிரிவை தாபித்தல்

நோயாளர் கவனிப்பு சேவையில் சுகாதார கல்வி மிக முக்கிய அம்சமாகும். இற்றைப்படுத்தப்பட்ட செம்மையான சுகாதார கல்வி மூலம் நோய் ஏற்படுவதை தடுத்தல், நோய் குணமடைதலை துரிதப்படுத்தல், புதிதாக உண்டாகும் நோய்க்கோளாறுகளை குரைத்தல் என்பனவற்றுக்கு இது உதவியாய் அமையும். சுகாதார கல்விப் பிரிவுக்கு பொருத்தமான இடமொன்று இல்லாததன் காரணமாக மருத்துவமனையின் சுகாதார கல்வி பணிகளை வினைத்திறனுடன் நடாத்திச் செல்வதற்கு முடியாமற்போனது.

சுகாதார கல்விப் பிரிவு புதிய இடமொன்றில் தாபிக்கப்பட்டதன் பின்னர் இந்த செயற்பாட்டில் முன்னேற்றம் காணக்கிடைத்ததோடு, இது நோயாளிகளின் அறிவு அதேபோன்று நடவடிக்கைகளிலும் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்தப் பிரிவு மூலம் செய்யப்படும் சுகாதாரக் கல்வி விரிவுரைகள் மற்றும் ஒலி ஒளி ஊடகங்களின் மூலம் செய்யப்படும் கல்வி பணிகள் மருத்துவமனையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 5. சமூக பொறுப்புக்களை இனங்காணுதல் : இசுறுபாயவில் நடாத்தப்பட்ட மருத்துவ சிகிச்சை

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை இசுறுபாயவில் கல்வி அமைச்சை முதன்மையாகக் கொண்டு மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றது. இந்த சிகிச்சையளிப்பு மூலம் இசுறுபாயவில் சேவை புரிந்து கொண்டிருக்கும் பதவியணியினர்களுக்கும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர் களுக்கும் மருத்துவ சிகிச்சை வழங்கப்படுவதோடு, மேலதிக சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனைக்கு தொடர்புபடுத்தப்படுகின்றனர்.

## 6. தேசிய உற்பத்திதிறன் போட்டிகளில் வெற்றி

தேசிய உற்பத்திதிறன் செயலகத்தினால் நடாத்தப்படும் தேசிய உற்பத்திதிறன் போட்டி இலங்கையில் நடாத்தப்படும் முதன்மையான உற்பத்தித்திறனை மதிப்பிடும் போட்டியாகும். ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையினால் இந்த போட்டி 2010/11 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித்திறன் "சீ" பிரிவின் கீழ் வெற்றி கொள்ளப்பட்டது. தற்போது மருத்துவ மனையில் உற்பத்தித்திறன் திட்டங்கள் சில நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் உற்பத்திதிறன் தொடர்பில் மிக உயர்ந்த மதிப்பீட்டிற்குள்ளாவது எமது அவவாகும்.

## 7. கட்டணம் செலுத்தும் அறைகளுடனான காவறைத் தொகுதி

சகல வசதிகளுடனும் கூடிய பணம் செலுத்தும் அறைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் உள்ளது. இந்த கட்டணம் செலுத்தும் அறைத் தொகுதியில் தனி அறைகள், சோடி அறைகள், 06 படுக்கைகளைக் கொண்ட பிரிவு ஆகியன உள்ளன. கடந்த காலங்களில் 06 படுக்கைகளை கொண்ட பிரிவுக்கு கூடுதலான கோரிக்கைககள் இல்லாமை எம்மால் அவதானிக்கப்பட்டதுடன் தனியான படுக்கைகளுடன் கூடிய அறைகளுக்கு கூடிய கோரிக்கைகள் நிலவின. இதற்கமைவாக 06 படுக்கைகளைக் கொண்ட பிரிவு தனியான படுக்கைகளைக் கொண்ட 02 அறைகளாக மாற்றப்பட்டது.

இவ்வாறு நிருமாணிக்கப்பட்ட அறைகளுக்கு கூடிய கோரிக்கைகள் உள்ளமையினாலும் மிக கூடிய வருமானம் கிடைக்கின்றமை தெரிய வந்தமையினால் மேலும் 06 படுக்கைகளைக் கொண்ட பிரிவு 04 படுக்கைகளுடன் நோயாளியின் உதவிக்கு இருப்பவருக்கும் படுக்கையை ஒதுக்கி வைக்கும் விதத்தில் அறைகளாக மாற்றப்பட்டன.

## 8. காவறைகளின் துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை கட்டியெழுப்பப்பட்டது 30 வருடங்களுக்கு முன்னர் ஆகையினால் இந்த கட்டிடங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது அத்தியாவசியமாகும். இதன் மூலம் நோயாளிகளின் துப்பரவேற்பாட்டில் மிக முக்கியமான அம்சமொன்றான மலசலகூடங்கள் மிக மோசமான நிலையில் காணப்பட்டதோடு, துரிதமாக அவற்றின் பழுதுபார்த்தல் வேலைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

துப்பரவேற்பாட்டு மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் 10,11,12,15,17 ஆம் இலக்க காவறைகளிலுள்ள மலசலகூடங்கள், குளியல் அறைகள் முழுமையாக திருத்தப்பட்டன. அத்துடன், குளியல் அறைகளின் கதவுகள், மலசலகூடபோச்சி, தண்ணீர் பூ மற்றும் குளியலறை திரைச்சீலை என்பனவும் புதிதாக பொருத்தப்பட்டன.

## 9. வழிகாட்டி பெயர்ப்பலகைகளின் புதுப்பித்தல் வேலைகள்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை போன்ற பெரிய நிறுவனமொன்றில் முறையாக வழிகாட்டி பெயர்பலகைகளை காட்சிப்படுத்தி வைப்பது மிக முக்கியமானதாகும். இது நோயாளிகளுக்கும் நோயாளிகளை பார்வையிட வருபவர்களுக்கும் இலகுவாக அமையும். அரசாங்க கொள்கைக்கு அமைவாக இந்த பெயர்பலகைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

இந்த திட்டத்தின் கீழ் பழைய மற்றும் தெளிவற்ற பெயர்ப்பலகைகளை அப்புறப்படுத்தி, இலகுவாக வாசிக்கக்கூடிய மும்மொழிகளிலுமான வழிகாட்டி பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் தழுவப்படும் விதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த திட்டம் மருத்துவமனை முழுவதும் நடைமுறைப்படுத்துவது எமது நோக்கமாகும்.

## 10. மருத்துவ பதிவேட்டு அறையை புனரமைத்தல்

மருத்துவமனையொன்றில் மருத்துவ பதிவேடுகளை முறையாகவும் பாதுகாப்பாகவும் பேணுவது மருத்துவமனை முகாமைத்துவத்தின் அத்தியாவசிய அம்சமொன்றாகும். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் உள்ள முறையாவது சகல மருத்துவ பதிவேடுகளை மருத்துவ பதிவேட்டு அறையில் களஞ்சியப்படுத்தி வைத்து, நோயாளி ஒருவர் மீண்டும் மீண்டும் சிகிச்சை பெறுவதற்காக வருகைதரும் போது இந்த மருத்துவ பதிவேட்டு அறிக்கையை பயன்படுத்துவதாகும். இதன்மூலம் நோயாளிகளுக்கான சிகிச்சை மற்றும் பதிவேடு ஆகியவற்றின் வினைத்திறன் மேம்படும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மருத்துவ பதிவேட்டு அறையை முழுமையாக புனரமைத்து பதிவேடுகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் தேடி எடுப்பதற்கு இலகுவாகும் விதத்திலும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டது. இதனால் மருத்துவ பதிவேடுகள் தேடி வழங்கும் வரை நோயாளிகள் செலவழித்த காலம் குறைந்ததோடு, சேவையின் தரமும் உயர்வடைந்துள்ளது.

## 11. ECG பிரிவை புதிய இடமொன்றில் தாபித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் ECG பிரிவு முன்னர் அமைந்திருந்தது. அவசர சிகிச்சை பிரிவுக்கு தொலைவில் உள்ள ஒரு இடத்திலாகும். இதனால் நோயாளிக்கும் அதேபோன்று மருத்துவமனை ஊழியர்களுக்கும் ECG பெறும் போது நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்டன. ECG அறிக்கைகளை வழங்கவேண்டிய சந்தர்ப்பங்களில் இந்த சிக்கல் பெரிதாக இருந்தது. அதுமட்டுமின்றி இந்த ECG பிரிவு இடவசதியற்ற ஒரு இடத்தில் இருந்ததோடு, நோயாளிகளின் தனிப்பட்ட நிலைக்கும் அவர்களடைய வசதிக்கும் இடையூறாக இது இருந்தது.

மேற்குறிப்பிட்ட சகல விடயங்களையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் ECG பிரிவு அவசர சிகிச்சை பிரிவுக்கு மிக அண்மையில் உள்ள ஒரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. நோயாளியின் தனிப்பட்டநிலை மற்றும் மதிப்பு ஆகியவற்றை பாதுகாக்கும் விதத்தில் ECG அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கும் காலதாமதமின்றி ECG அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கும் முடிந்தது. அத்துடன் மிக விரைவில் ECG அறிக்கைகளை வழங்கும் வசதி கிடைத்ததன் மூலம் பதவியணியினருக்கும் இது வசதியாக அமைந்தது.

## 12. மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களின் கூரைகளை புனரமைத்தல்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் 1993 ஆம் ஆண்டில் நிருமாணிக்கப்பட்டது. இவற்றிற்கான பல புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வது அத்தியவசியமானதாக இருந்தது. இதன் முதற்கட்டமாக 5 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டு மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களின் கூரைகள் புனரமைக்கப்பட்டன.




"தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் நடாத்தப்பட்ட 2010/11 தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் "சீ" பிரிவின் கீழ் தேசிய உற்பத்தித் திறன் பரிசு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையினால் வெற்றி கொள்ளப்பட்டது."

www.sjghsrilanka.org




ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் உத்தியோகபூர்வ இணையத் தளம்.

# 2. முகாமைத்துவ குழு



# 2.1 தலைவரின் செய்தி



ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு இந்த செய்தியை வழங்குவது கடந்த ஆண்டில் நாம் பெற்ற வெற்றி தொடர்பில் பெருமையுடனாகும். இந்த மருத்துவமனையின் தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர் சில சவால்களையும் இடையூறுகளையும் இல்லாதொழித்து சிறந்த நிறுவனச் சூழலொன்றை கட்டியெழுப்புவதில் நான் வெற்றிகண்டேன். மருத்துவமனையின் குறிக்கோள்களை அடைவதற்கு தொழில்சார் தேர்ச்சியும் மிகுந்த அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் மருத்துவமனையின் பதவியணியினர்களும் எமது வெற்றிக்கு மூலகாரணமாகும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை 976 படுக்கைகளை கொண்ட பொது காவறைகளையும் 94 படுக்கைகளைக் கொண்ட கட்டணம் செலுத்தும் அறைகளையும் கொண்டுள்ளது. பொது காவறையொன்றில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளி ஒருவரிடமிருந்து நாளொன்றுக்கு 650/= ரூபா அறவிடப்பட்டாலும் நோயாளி ஒருவரின் நாளொன்றுக்கான உண்மையான செலவு 1100/= ரூபாவாகும். அரசாங்க கொள்ளைக்கு அமைவாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனைக்கு அசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி ஒத்துழைப்பு மக்களுக்கு வழங்கப்படுவதன் காரணத்தினால் இத்தகைய பெரிய சலுகையை நோயாளிக்கு வழங்குவதற்கு எமக்கு இயலுமானதாகவுள்ளது.

2012 ஆம் ஆண்டில் இந்த மருத்துவமனை காலெடுத்து வைத்தது. சுகாதாரதுறையின் அதற்கே உரிய தன்மையை நன்றாக அறிந்து கொண்டும் அதற்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கும் பல திறமுறைகளை கொண்டுமாகும். எமது பிரதான குறிக்கோள் நிறுவனத்தின் பௌதிக மற்றும் மனித வளங்களை சிறந்த முறையில் முகாமித்து இந்த மருத்துவமனையின் வருமானத்தை செலவுகளை ஈடுசெய்யும் விதத்தில் கொண்டு வருவதாகும். இந்த குறிக்கோளை வெற்றி கொள்ளும் நோக்குடன் விரயத்தையும் ஊழலையும் குறைப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் விசேடமானதாகும்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனை வரலாற்றில் முதற்தடவையாக வேறு நிறுவனமொன்றில் நடாத்திச் செல்லும் சிகிச்சை நிலையமொன்றை கல்வி அமைச்சில் தாபித்து புரிந்துணர்வு உடன் படிக்கையொன்றை செய்து கொண்டுள்ளது. இந்த விசேட குறிக்கோளின் நோக்கமாவது அரசாங்க சேவையாளர்களை மருத்துவமனையின்பால் கவர்ந்திழுப்பதன் மூலம் மருத்துவமனையின் வருமா னத்தை அதிகரித்துக் கொள்வதாகும். மேலும் கட்டணம் செலுத்தும் புதிய காவறை கட்டடத் தொகுதியொன்றை நிருமாணிப்பதன் மூலம் எமது சேவையை பெறும் நோயாளிகளின் எண் ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கும் நோயாளிகளுக்கு எம்மால் வழங்கப்படும் சேவைகளின் அளவினை அதிகரித்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்கு ஒத்தாசை நல்கும் அரசாங்க தொழில்முயற்சிகள் பற்றிய பாராளுமன்ற குழுவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் தலைவராக எனது பணியை பலம்மிக்கதாக நடாத்தி செல்வதற்கு பெரும் ஒத்தாசை நல்கும் சுகாதார அமைச்சர் மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும் பிரதி சுகாதார அமைச்சர் மாண்புமிகு லலித் திசாநாயக்க அவர்களுக்கும் சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் நிஹால் ஜயதிலக்க அவர்களுக்கும் சுகாதார பணிப்பாளர் அதிபதி மருத்துவர் பாலித்த மஹீபால அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், மருத்துவமனையின் நிருவாகத்தை சரியான முறையில் நடாத்திச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் மருத்துவமனை பணிப்பாளர் சபைக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.கே.கமகே அவர்களுக்கும் பதில் பிரதி பணிப்பாளர் மருத்துவர் ஷியாமா சுபசிங்க அவர்களுக்கும் மருத்துவமனை செயலாளர் திலானி ராஜபக்ஷ அவர்களுக்கும் நிபுணத்துவ மருத்துவர்கள் உட்பட ஏனைய மருத்துவர்கள் அனைவருக்கும் தாதி பதவியினர்களுக்கும் எனக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கும் மருத்துவமனையின்பால் அவர்கள் காட்டும் அர்ப்பணிப்புக்கும் எனது நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.எம்.என்.டீ.பண்டார**
**தலைவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை**

# 2.2 பணிப்பாளரின் செய்தி



ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு செய்தியை வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டணம் அறவிடப்படும் மருத்துவமனையொன்றாக நடாத்திச் செல்லப்படும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனைக்கு சில சவால்கள் உள்ளன. ஆயினும், பதவியினர்கள் அனைவரும் ஒரு குழு என்ற உணர்வுடன் செயலாற்றுவதன் மூலம் இந்த சவால்களை வெற்றி கொண்டு சுகாதாரத்துறையில் நற்பெயரை தக்கவைத்துக் கொள்வதற்கு இயலுமாய் உள்ளது. இந்த மருத்துவமனையின் ஆண்டறிக்கையிலுள்ள தரவுகள் 2012 ஆம் ஆண்டில் எமது குறியிலக்குகளுக்கு அண்மிப்பதற்கான அத்தாட்சியாக உள்ளது. இந்த அதிகரிப்பின் மூலம் காட்டப்படுவது போட்டிமிக்க தனியார் சுகாதார துறையுடன் சமமாக போட்டியிட்டமையாகும். எம்மால் திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் மூலம் மிக அண்மைக்காலத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை இலங்கையில் சுகாதார துறையின் முதலாமிடத்துக்கு வருமென்பது எமது நம்பிக்கையாகும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை நிலையான பயணத்தில் ஈடுபட்டிருப்பது உள்நாட்டு, வெளிநாட்டு மக்களுக்கு உயர் மட்டத்திலான சுகாதார சேவையை வழங்கும் நீண்டகால தொலைநோக்கினை கொண்டாகும். பரந்துபட்ட தனியார் மருத்துவமனை வலையமைப்பொன்று இருந்தபோதிலும் நோயாளிகளும் அவர்களுடைய உறவினர்களும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின்பால் நம்பிக்கை வைத்து வருவது மிக கூடிய தொழில் தேர்ச்சி மற்றும் கடும் அர்ப்பணிப்புடனான மருத்துவர்கள், தாதிமார்கள், தொழினுட்ப உத்தியோகத்தர்கள் பிற உத்தியோகத்தர்கள் என நாம் பலம் கொண்டு இருப்பதனாலாகும்.

எமது வெற்றிக்கு எச்சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு நல்கும். சுகாதார அமைச்சர் மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும் பிரதி சுகாதார அமைச்சர் மாண்புமிகு லலித் திசாநாயக்க அவர்களுக்கும் சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் நிஹால் ஜயதிலக்க அவர்களுக்கும் சுகாதார பணிப்பாளர் அதிபதி மருத்துவர் பாலித்த மஹீபால அவர்களுக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் தலைவர் திரு.நிமல் பண்டார அவர்களுக்கும் மருத்துவமனை பணிப்பாளர் சபைக்கும் முகாமைத்துவ சபைக்கும் பதில் பிரதி பணிப்பாளர் மருத்துவர் ஷியாமா சுபசிங்க அவர்களுக்கும் மருத்துவமனை செயலாளர் திலானி ராஜபக்ஷ அவர்களுக்கும் பெரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பதவியினர்கள் அனைவருக்கும், எம் மீது நம்பிக்கை வைத்து மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் ஏற்பட்டுள்ள மெச்சத்தகு மாற்றத்தை எடுத்துக்காட்டி இந்த ஆண்டறிக்கையை மிக சிறப்பாக தயாரித்த மருத்துவர் பிரியங்க சேனாநாயக்காவுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மருத்துவர் எஸ்.ஏ.கே.கமகே**
**MBBS (Sri Lanka), MSc (Med. Admin)**
**பணிப்பாளர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை**

# 2.3 பணிப்பாளர் சபை



இடமிருந்து வலமாக;

மருத்துவர் (திருமதி) மேதா வீரசேக்கர - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி

மருத்துவர் (திரு) டீ.ஜே.விக்ரமரத்ன - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி

திருமதி ஹிரன்ஷா களுதன்திரி - திருமதி ஹிரன்ஷா களுதன்திரி

மருத்துவர் (திரு) ஹர்ஷ சமரவீர - அமைச்சின் பிரதிநிதி

மருத்துவர் (திரு) எஸ்.ஏ.கே.கமகே- பணிப்பாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

திரு.எம்.எம்.என்.டீ.பண்டார - தலைவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

பேராசிரியர் (திரு) ஜயந்த ஜயவர்தன - பணிப்பாளர், மருத்துவபட்ட பின்படிப்பு நிறுவன

மருத்துவர் (திரு) மஹீபால - மருத்துவர் (திரு) மஹீபால

பேராசிரியர் (திரு) ஜனக்க த சில்வா - அமைச்சின் பிரதிநிதி

மருத்துவர் (திரு) டீ.எல்.பியறிசி - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி

திருமதி திலானி ராஜபக்ஷ - பணிப்பாளர் சபை செயலாளர்

# 2.4 முகாமைத்துவ குழு

மருத்துவர் (திரு) எஸ்.ஏ.கே.கமகே
பணிப்பாளர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுமருத்துவமனை
குழுத் தலைவர்

மருத்துவர் (திருமதி) சீ.ஆரியநந்த - 2012 ஏப்ரல்
வரைமருத்துவர் (திருமதி) எஸ்.சுபசிங்க - 2012 மே வரை
ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுமருத்துவமனை
உறுப்பினர்

நிபுணத்துவ மருத்துவர் (திரு) ரொஹான் அலோசியஷ்
சிறுவர் நோய் பற்றிய நிபுணத்துவ மருத்துவர்
உறுப்பினர்

நிபுணத்துவ மருத்துவர் (திரு) பி.ஜே.அம்பவத்த
நோயியல் நிபுணத்துவ மருத்துவர்
உறுப்பினர்

நிபுணத்துவ மருத்துவர் (திரு) ஹர்ஷ குணசேக்கர
நரம்பியல் நோய் நிபுணத்துவ மருத்துவர்
உறுப்பினர்

திரு.டீ.ஏ.பெரேரா
உதவி கணக்காளர்
உறுப்பினர்

திருமதி திலானி ராஜபக்ஷ
மருத்துவமனை செயலாளர்
உறுப்பினர்

திருமதி ஏ.என்.சப்புதன்திரி
தலைமை தாதி உத்தியோகத்தர்
உறுப்பினர்

# 2.5 நிபுணத்துவ மருத்துவர்கள்

## உடற்கூறு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) அநுலா விஜேசுந்தர
*MBBS, MD (Cey), FRCP (Eng)*

மருத்துவர் (திருமதி) சம்பா ஜயசுந்தர
*MBBS, MD*

பேராசிரியர் (திரு) ஆர்.எல்.சத்தரசிங்க
*MBBS, MD. MRCP (London), FRCP (Ed.), MRCP, FRCP (USA), FRCP (Cey), CCST (UK), MACG (UK)*

மருத்துவர் (திரு) சின்தக்க த சில்வா
*MBBS, MD, MRCP (UK)*

## நிபுணத்துவ அறுவை சிகிச்சை மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) காமினி குணதிலக்க
*MBBS (Cey), FRCS*

மருத்துவர் (திரு) டீ.எல்.பியசிறி
*MBBS, MS, FRCS (Ed.)*

மருத்துவர் (திருமதி) டீ.எச்.சமரகோன்
*MBBS, MS (Colombo), MRCP (UK)*

## சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு)ஆர்.ஏ.ஆர்.டீ.அலோசியஸ்
*MBBS, DCH, MD, MRCP*

## பெண் நோய் மற்றும் மகப்பேறு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) ஹேமந்த பெரேரா
*MBBS, MS (Sri Lanka), FRCOG (UK)*

மருத்துவர் (திரு) மாதவ கருணாரத்ன
*MBBS, MS, FRCOG, FSLCOG*

## இருதய நோய் நிபுணத்துவ மருத்துவர்கள

மருத்துவர் (திருமதி) என்.எல்.அமரசேன
*MBBS, MD (Colombo), FRCA (London)*

மருத்துவர் (திரு) ஜே.பி.ஹேரத்
*MBBS, MD*

## மரபாய்வு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) மேதா வீரசேக்கர
*MBBS, DCH, MD (Pead.), MRCP (UK)*

## சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) சீ.ஏ.ஹேரத்
*MBBS, MD*

## நரம்பியல் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) எச்.எச்.குணசேக்கர
*MBBS, MD, MRCP*

## மூட்டுவாதநோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) கலீல் காசிம்
*MBBS, MD*

## தோல் நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) டீ ஆரியவங்ச
*MBBS, MD (Dermatology)*

## இருதய அறுவை சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) கப்புருகே
*MBBS, MS, FRCS*

## எலும்புமுறிவு நிபுணத்துவ அறுவை சிகிச்சை மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) ஏ.பீ.எஸ்.ஆனந்த பெரேரா
*MBBS, MS, FRCS*

## கண் அறுவை சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) டீ.எச்.வாரியபொல
*MBBS, DO, FRCS (Ed), MS*

## நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) எம்.விஜேரத்ன
*MBBS (Hons, Melb.), MS (SL), FRCS (Ed.)*

## தொண்டை,காது,மூக்கு பற்றிய நிபுணத்துவ அறுவை சிகிச்சை மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) அசோக்க ஜயசேன
*MBBS, MS, FRCS*

## உணர்விழப்பு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) சீ.என்.கருணாரத்ன
*MBBS, MD (Cey), FRCA (London)*

மருத்துவர் (திரு) வீ.கே.பி.இந்திரரத்ன
*MBBS, MD, FFARCSI, FRCA*

மருத்துவர் (திருமதி) ஜே.எச்.கே.ராஜசிங்க
*MBBS, MD (Anaesthesia), FRCA (UK)*

மருத்துவர் (திருமதி) ஆர்.பி.எஸ்.பலிஹவடன
*MBBS, MD (Anaesthesia), FRCA (UK)*

## கதிரியக்க நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) டீ.ஜே.விக்ரமரத்ன
*MBBS (Cey), MD (Radiology)*

மருத்துவர் (திருமதி) என்.எம்.பி.கே.அரம்பேபொல
*MBBS, MD (Radiology)*

மருத்துவர் (திருமதி) ஆர்.எம்.எஸ்.ரீ.சமரவீர
*MBBS, MD (Radiology)*

## நோயியல் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) எம்.ஜோசப்
*MBBS, Dip. Path., MD (Pathology)*

மருத்துவர் (திரு) பி.ஜே.அம்பவத்த
*MBBS, Dip. Path., MD (Pathology)*

மருத்துவர் (திருமதி) சொனாலி றொட்றிகோ
*MBBS, Dip. Path., MD (Pathology)*

## குருதியியல் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (செல்வி) சீ.காரியவசம்
*MBBS, Dip. Path., MD (Haematology)*

## நுண்ணுயிர் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) எஸ்.கே.ஜயதிலக்க
*MBBS, Dip. Medical Micro., MD (Microbiology)*

## வதிவு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) சியாமா சுபசிங்க
*MBBS, MD*

# 3. தொழிற்பாட்டு தகவல்கள்



# 3.1 செயலாற்றுகை





கடந்த ஆண்டில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை நடப்பாண்டில் அடிப்படை செயலாற்றுகை சுட்டெண்ணில் விசேட வளர்ச்சியை காட்டியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் மருத்துவமனையானது அதன் நற்பெயரையும் அடையாளத்தையும் கிட்டியுள்ளதென்பது இந்த வளர்ச்சியின் மூலம் தெரிகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 53952 | 55142 | 53962 | 52554 | 57119 |
| வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை | 16895 | 16222 | 15536 | 16434 | 16533 |
| கிளினிக்குகளில் கலந்துகொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 147990 | 153591 | 149923 | 147289 | 147757 |
| செய்யப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை | 16575 | 17249 | 14152 | 13173 | 13618 |
| படுக்கைகள் உபயோகப்படுத்தும் விகிதாசாரம் (%) | 73.13 | 74.70 | 66.10 | 66.80 | 70.47 |
| மரண விகிதாசாரம் (%) | 1.39 | 1.36 | 1.32 | 1.35 | 1.31 |
| மருத்துவமனை வருமானம் (ரூபா மில்லியன்) | 1346 | 1529 | 1623 | 1693 | 1857 |

2011ஆம் ஆண்டுடன் ஒப்படும் போது 2012 ஆம் ஆண்டில் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை, வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கை, கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை, படுக்கைகள் உபயோ கப்படுத்திய விகிதாசாரம், செய்யப் பட்ட அறுவைச் சிகிச்சைகள் என்பன கணிசமான அதிகரிப்பினை காட்டுகின்றது.

கடந்த 5 ஆண்டுகளில் குறைந்த மரண விகிதாசாரம் 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள தோடு, மருத்துவமனையின் வரு மானமும் கடந்த 5 ஆண்டுகளிடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2012 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.



# 3.2 துறைசார் மீள்நோக்கு

## කායික වෛද්‍ය ඒකකය




ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பொது மருத்துவ பிரிவு சகல நவீன நோயாளிகளுக்கான கவனிப்பு வசதிகளுடன் கூடிய 3 காவறைகளைக் (காவறை இலக்கம் 6, 12, 17) கொண்டுள்ளது. பொது மருத்துவ பிரிவின் மூலம் வெளிநோயாளர் சிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு, நீரிழிவு உட்பட ஏனைய சுரப்பி வகையில் உள்ளாரசுரக்கும் நோய் சார்ந்த நிலைமைகளுக்கு விசேட கிளினிக்குகளும் நடாத்தப்படுகின்றன. இலங்கையில் உயர் அத்துடன் அதிகரித்து வரும் காசநோய் சம்பந்தமான விசேட கிளினிக்கு மூலம் காசநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது. பல மருத்துவ குழுக்கள் பல்வேறுபட்ட அவசர மற்றும் நாளாந்த மருத்துவ சிகிச்சை சேவைகளில் ஈடுபடுவதோடு, மிகச் சிறந்த சேவையொன்று வழங்குவதற்கு ஏனைய விசேட பிரிவுடன் நெருங்கிய உறவை பேணி பணியாற்றுகின்றன.


மார்புசளி சார்ந்த பல்வேறு நோய்களை நிர்ணயிப்பதற்கும் அதற்கு சிகிச்சை அளிப்பதற்கும் நவீன Fiber-Optic bronchoscopy வசதிகள் பொது மருத்துவ பிரிவினால் வழங்கப்படுகின்றது. இரப்பை நோய் சம்பந்தமான சிகிச்சை

யளிப்புக்காக endoscopic வசதிகளையும் பொது மருத்துவ பிரிவு கொண்டுள்ளது

கடந்த 5 ஆண்டுகளில் ஆகக்கூடுதலாக அனுமதிக்கப்பட்ட நோயாளரின் எண்ணிக்கை, கிளினிக்குகளில் கலந்து கொண்ட எண்ணிக்கை, படுக்கைகள் பயன்படுத்திய விகிதாசாரம் மற்றும் குறைந்த மரண விகிதாசாரம் என்பன 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகள் | 337 | 338 | 395 | 344 | 395 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 39410 | 39301 | 39421 | 36863 | 39638 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 17229 | 17291 | 17009 | 16986 | 19714 |
| படுக்கைகள் உபயோகப்படுத்தும் விகிதாசாரம் (%) | 113.43 | 111.28 | 109.53 | 115.87 | 126.13 |
| மரண விகிதாசாரம் (%) | 2.05 | 2.02 | 1.76 | 1.99 | 0.78 |



# துறைசார் மீள்நோக்கு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் அறுவைச் சிகிச்சை பிரிவு சாதாரண 3 காவறைகள் (காவறை இலக்கம் 8,14,15) உட்பட கட்டணம் செலுத்தும் காவறைகள் ஆகியவற்றைக் கொண்டு நோயாளிகளுக்கான கவனிப்புச் சேவையை வழங்குகின்றது. அறுவைச் சிகிச்சை பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சை கிளினிக்குகள் மூலம் அறுவைச் சிகிச்சைக்கு முன்னரான அத்துடன் பின்னரான சேவைகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை நவீன வசதிகளுடன் கூடிய சத்திரசிகிச்சைகூட வசதிகளுடன் சிக்கலான அறுவைச் சிகிச்சை நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட நவீன அறுவைச் சிகிச்சை தீவிர கண்காணிப்புப் பிரிவையும் கொண்டுள்ளது. உடலுக்குள் சிறிய கமெராவை செலுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட குணமடையாத நோய்களுக்கான பரிசோதனை, நோயாளிகளுக்கான கவனிப்பு சேவை போட்டிகரமான விலைகளின் கீழ் அறுவைச் சிகிச்சை பிரிவினால் வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் மிக குறுகிய காலப்பகுதிக்குள் வெற்றிகண்டுள்ளன.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 435 | 422 | 431 | 444 | 450 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 12863 | 12895 | 12633 | 13001 | 13164 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6759 | 6284 | 6358 | 6763 | 7115 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சை | 4702 | 4706 | 3751 | 3713 | 3923 |
| படுக்கைகளின் பயன்படுத்துகை விகிதாசாரம் (%) | 59.06 | 58.36 | 45.36 | 47.93 | 54.84 |
| மரண விகிதாசாரம் (%) | 0.39 | 0.38 | 0.28 | 0.24 | 0.27 |

.இலங்கையில் தற்போதைய நோய் நிலை தொடர்பிலான போக்கை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையின் ஊடாக மார்பாகம் சார்ந்த நோய் நிலைமைகளுக் காகவும் பல்வேறுசிகிச்சை சேவைகள் வழங்கப்படுகின்றன. மார்பக புற்றுநோய் பரிசோதனை களும் மார்பக மீள் சீராக்கல் அறுவை சிகிச்சையம்கூட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையில் மேற்கொள்ளப்படுகின் றது. நோயாளிகளின் வசதி கருதி அறுவைச் சிகிச்சை பிரிவின் மூலம் ஒருநாள் அறுவைச் ஒருநாள் அறுவைச் சிகிச்சை சேவையும் வழங்கப் படுகின்றது.

2012 ஆம் ஆண்டின் அறுவைச் சிசிச்சை பிரிவில் பயன்படுத்தப்பட்ட படுக்கைகளின் விகிதாசாரத்திலும் மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு காணப்படுவதோடு, கடந்த 5 வருடங்களுடன் ஒப்பிடும் போது அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் 2012 ஆம் ஆண்டில் ஆகக்கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது.



# பெண்நோய், மகப்பேறு பிரிவு




சாதாரண கர்ப்பிணி தாய்மார்களிலிருந்து உட்சிக்கல் வாய்ந்த அத்துடன் அவதானம் மிக்க கர்ப்ப நிலைமைகள் வரை கவனிப்பு சேவைகள் பெண்நோய், மகப்பேறு பிரிவினால் வழங்கப்படுகின்றது. வலி தடுப்பு ஊசி, வலி தடுப்பு காஸ் ((Entonox gas) மற்றும் இடுப்புப் பகுதிக்கு வழங்கு வலி தடுப்பு ஊசி பயன்படுத்தி மிக சௌகரியமான மகப்பேறு உறுதிப்படுத்தப்படுகின்றது கரு வளர்ச்சி மற்றும் மாற்றங்களை கண்டறிதல் என்பனவற்றிற்காக செய்யப்படும் ஸ்கான் பரிசோதனைக்கு அதிநவீன தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றது

புற்றுநோய் மற்றும் புற்றுநோயல்லாத நிலைமைகள் அத்துடன் Urogynecological அறுவை சிகிச்சை, பல்வேறுபட்ட நோய் நிர்ணயம், Therapeutic அறுவைச் சிகிச்சை நடவடிக்கைமுறை மற்றும் பெண்நோய் அல்ட்றாசவுட் ஸ்கான் பரிசோதனை உட்பட பல அவசர மற்றும் அவசரமில்லாத பெண்நோய் கவனிப்பு சேவைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்ப பரிசோதனையிலிருந்து தேவையான சிகிச்சை வரையிலான உயர் தரத்தி லான கருவளத்துக்கான சிகிச்சையும் குடும்பக் கட்டுப்பாட்டு சேவையும் இந்த பெண்நோய், மகப்பேறு பிரிவினால் வழங்கப்படுகின்றது.


| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 291 | 288 | 291 | 294 | 335 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 33026 | 28920 | 27277 | 25421 | 23901 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7720 | 7777 | 7810 | 7871 | 8704 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 77.60 | 78.81 | 82.99 | 83.25 | 93.42 |
| மகப்பேறுகளின் எண்ணிக்கை | 4417 | 4091 | 3476 | 3877 | 4156 |
| மரண விகிதாசாரம் | 0 | 0 | 1 | 2 | 1 |

படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரமும் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் கடந்து 5 ஆண்டு காலமும் அதிகரித்துள்ளதோடு, தாய் மரண விகிதாசாரமும் கணிசமானளவு காணப்படுகின்றது.

படுக்கைகள் உபயோகப்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%)




அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை.



# சிறுவர் நோய் சிகிச்சை பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் சிறுவர்நோய் சிகிச்சைப் பிரிவு நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு உள்ளக மற்று வெளிநோயாளர் பிரிவு மூலம் சேவையை வழங்குகின்றது. சகல விதத்திலுமான அவசர மருத்துவ சிகிச்சை வழங்கும் வசதிகளுடனும் 43 படுக்கைகளையும் கொண்ட சிறுவர் காவறையின் மூலம் நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு தங்கி சிகிச்சை பெறுவதற்கான சேவையை வழங்குகின்றது.

சிறுவர் கிளினிக், ஆரோக்கியமான குழந்தைகளுக்கான கிளினிக், தடுப்பூசி வழங்கும் கிளினிக், சிறுவர் காசநோய் கிளினிக் போன்றவை இந்த பிரிவினால் வாராந்தம் நடாத்தப்படுவதோடு, இதில் அர்ப்பணிப்புமிக்க அனுபவம் வாய்ந்த மருத்துவ பதவியணி மூலம் ஆகக்கூடுதலான கவனிப்பு சேவை வழங்கப்படுகின்றத

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 340 | 333 | 331 | 337 | 346 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 8558 | 9389 | 7836 | 7300 | 6249 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3230 | 3885 | 3564 | 3284 | 3796 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 75.40 | 71.45 | 67.76 | 70.20 | 81.28 |
| தாய் மரண விகிதாசாரம் (%) | 0.18 | 0 | 0.03 | 0.09 | 0.03 |

கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டினல் ஆகக்கூடுதலான படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் கணிசமானளவு அதிகரிப்பினைக் காட்டுவதோடு, கடந்த 5 ஆண்டுகள் முழுவதும் மரண விகிதாசாரம் குறைந்து காணப்படுகின்றது.



# தொண்டை, காது, மூக்கு சிகிச்சை (ENT) பிரிவு




மிக அனுபவம்வாய்ந்த, வினைத்திறன்மிக்க பதவியணி மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தொண்டை,காது, மூக்கு பிரிவு உள்ளக மற்று வெளிநோயாளர் சேவைகளை வழங்குகின்றது. 60 படுக்கைகளைக் கொண்ட காவறை மூலம் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான சேவை வழங்கப்படுவதோடு, நவீன தொழினுட்ப கருவிகளைக் கொண்ட கிளினிக் மூலம் வெளிநோயாளர் கவனிப்புச் சேவையும் வழங்கப்படுகின்றது.


தொண்டை, காது, மூக்கு பிரிவின் கீழ் பேச்சு மற்றும் செவிப்புல பிரிவு வேறாக தாபிக்கப்பட்டுள்ளது. இந்த பிரிவின் மூலம் செவிப்புல பரிசோதனையும் பேச்சு சிகிச்சை கிளினிக்கும் நடாத்தப்பட்டு வருகின்றது. தலை மற்றும் கழுத்து சார்ந்த பிரதான அறுவைச் சிகிச்சையும் சிறு கமெரா உதவியுடன் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சை அடங்கலாக பாரிய அளவிலான அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 101 | 99 | 99 | 98 | 98 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7729 | 7554 | 7064 | 6382 | 6077 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1730 | 1558 | 1477 | 1314 | 1378 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 42.40 | 37.58 | 34.30 | 29.70 | 32.57 |
| மரண விகிதாசாரம் (%) | 0.06 | 0.13 | 0.07 | 0 | 0.22 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 766 | 690 | 687 | 543 | 539 |

செவிப்புலம் சார்ந்த பல்வேறுபட்ட பரிசோதனைகளை (Pure tone audiometry, tympanometry, brainstem evoke response assessments) மேற்கொள் வதற்கு தேவையான சகல வசதி களும் செவிப்புல பரிசோதனை கூடத்தில் உள்ளதோடு, Fiber-optic laryngoscopy மற்றும் naso-endoscopic பரிசோதனை செய்யக்கூடிய வசதிகளையும் இந்த பிரிவு கொண்டுள்ளது.

தொண்டை, காது, மூக்கு சிகிச்சை பிரிவு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரத்திலும் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பை காட்டுகின்றது.



# எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு





சிறந்த முறையில் தாபிக்கப்பட்டதும் அங்கீகாரம் பெற்றதுமான எலும்புமுறிவு சிகிச்சை பிரிவொன்று ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை கொண்டுள்ளது. சகல விதத்திலுமான எலும்புமுறிவு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் நவீன கருவிகள் இந்த பிரிவிடம் உள்ளது. மருத்துவ பட்டப்பின் படிப்பு அபேட்சகர்களுக்கிடையில் இந்த பிரிவு மிகப் பிரபல்யமானது. முள்ளந்தண்டு சார்ந்த அறுவை சிகிச்சை (Scoliosis Cirrection Surgeries and other Specialised Spinal Surgeries) மேற்கொள்ளும் போது இந்தப் பிரிவு மிக உயர்வான வெற்றியை கண்டுள்ளது. இது இலங்கையில் சிறுவர் எலும்புமுறிவு சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் முன்னுரிமை பெற்ற மத்திய நிலையமொன்றாகும்.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 95 | 98 | 98 | 99 | 102 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 8029 | 8761 | 8395 | 8721 | 7639 |
| சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 2206 | 2159 | 2240 | 1984 | 2107 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 87.90 | 111.70 | 65.34 | 66.60 | 59.31 |
| மரண விகிதாசாரம் (%) | 0.27 | 0.14 | 0.27 | 0.10 | 0.19 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 3193 | 3928 | 2202 | 1966 | 1624 |


ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையின் எலும்புமுறிவு சிகிச்சைப் பிரிவு இடுப்பு, முழங்கால், தோள், முழங்கை போன்ற மூட்டு இணைப்பு அறுவைச் சிகிச்சைகளை செய்யும் முன்னோடியான விசேட பிரிவொன் றாகும். நீண்டகாலமான வழங்கும் இந்த சேவைகள் மிகுந்த உயர் வெற்றியை கொண்டுள்ளது. நோய் நிர்ணய மற்றும் athroscopy பரிசோத னையும் எலும்புமுறிவு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின் றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் எலும்புமுறிவு சிகிச்சை பிரிவு தொழில்சார் விளையாட்டு வீரர்களின் காயங் களுக்கு சிகிச்சை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு மருத்துவ நிலையமொன்றுமாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பினைக் காட்டுவதோடு, கடந்த 5 வருடங்களில் குறைந்த மரண விகிதாசாரத்தையும் பேணுவதிலும் வெற்றி கண்டுள்ளது.



# கண் நோய் பிரிவு






பெரும்பாலான கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு முழுமையான கவனிப்பு சேவைகளை வழங்கும் நல் அங்கீகாரம்பெற்று கண்நோய் பிரிவொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை கொண்டுள்ளது. அதிநவீன நோய் நிர்ணய மற்றும் சிகிச்சை வசதிகளைக் கொண்ட கண் கிளினிக் வாரத்துக்கு ஐந்து நாட்கள் நடாத்தப்படுகின்றது. பொது கண் பரிசோதனை, கண்பார்வை குறைபாட்டுக்கான சிகிச்சையளித்தல், நீரிழிவு நோயினால் உருவான கண் குறைபாடுகளுக்கு சிகிச்சையளித்தல் என்பன கண்நோய் கிளினிக்கில் மேற்கொள்ளப்படுகின்றன. கண் சத்திரசிகிச்சை கூடம் நவீன நோய் நிர்ணய மற்றும் சிகிச்சை வசதிகளுடன் அரசாங்கத்துக்குச் சொந்தமான தரம்வாய்ந்த சத்திர சிகிச்சை கூடமாகும்.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 140 | 140 | 140 | 144 | 148 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 14425 | 14837 | 14651 | 14538 | 15356 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1931 | 1931 | 1742 | 1766 | 1690 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 66.90 | 68.14 | 57.51 | 61.30 | 56.40 |
| மரண விகிதாசாரம் (%) | 0 | 0 | 0.06 | 0 | 0 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 3746 | 3814 | 3782 | 3506 | 3572 |

பரந்துபட்ட நவீன கண் பரிசோதனை (Fundus fluorescein angiography and indocyanine green angiography facilities), நீரிழிவு மற்றும் வேறு பல காரணங்களினால் உருவாகும் கண் குறைபாடுகளுக்கான லேசர் சிகிச்சை (focal laser treatment and pan retinal photocoagulation for diabetic retinopathy and other vascular disorders of the eye), முதுமை காரணமாக ஏற்படும் கண்பார்வை குறைபாடு (age related macular degeneration with photodynamic therapy) சார்ந்த சிகிச்சை, அதி நவீன கண்பரிசோதனை கருவிகள் (anterior segment OCT, biometry facilities with IOL master corneal topographic facilities and ultrasound A & B scan facilities) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் கண்நோய் பிரிவிலுள்ள சில வசதிகளாகும்.

கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் கண் கிளினிக் சார்பில் வந்த நோயாளிகளின் எண்ணிக்கையில் கணிசமானளவு அதிகரிப்பு காணப்பட்டதோடு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.



# இருதய நோய் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் இருதய நோய் பிரிவானது, இருதய நோய் காவறை, இருதய சிகிச்சை பிரிவு (Coronary Care Unit) High Dependency Unit (HDU), Cardiac Catheterization ஆய்வுகூடம், இருதய பரிசோதனைப் பிரிவு ஆகிய விசேட இருதயநோய் கவனிப்பு சேவைகளை வழங்கும் பிரிவுகளைக் கொண்டதாகும். பல்வேறுபட்ட கடுமையான மற்றும் நாட்சென்ற இருதயநோய் சார்பில் இருதயநோய் சார்பில் இருதயநோய் காவறைகள் , இருதயநோய் கவனிப்பு பிரிவு, HDU ஆகியவற்றின் மூலம் கவனிப்புச் சேவை வழங்கப்படுகின்றது. மிகக் கடுமையான அத்துடன் அவசர இருதயநோய் நிலைமை சார்பில் அனுபவம் மிக்க அர்ப்பணிப்புடனான பதவியணியொன்றின் மூலம் வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்படுகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 95 | 97 | 99 | 99 | 100 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 5040 | 5027 | 5234 | 5582 | 6123 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1651 | 1813 | 1829 | 1944 | 2089 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 60.30 | 68.30 | 52.10 | 55.50 | 62.40 |
| மரண விகிதாசாரம் (%) | 2.36 | 2.98 | 3.55 | 2.98 | 3.97 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 432 | 445 | 483 | 542 | 579 |


Cardiac Catheterization சேவை மூலம் முன்னர் திட்டமிடப்பட்ட அதேபோன்று அவசர நிலைமைகளிலும் குருதி நாள பரிசோதனை (Cardiac Catheterization), நரம்புகளூடாக செய்யப்படும் இருதய நோய் சிகிச்சை (Percutaneous Coronary interventions), வலது இருதய Catheterization தற்காலிக மற்றும் நிலையான Pacemaker பொருத்துதல், ASD Closure போன்ற பரிசோதனைகளும் சிகிச்சை களும் மேற்கொள்ளப்படுகின்றது. e c h o பரிசோதனை உடலில் பொருத்தும் சிறிய கருவியின் மூலம் குருதி அழுத்தம் மற்றும் E C G உட்பட பரந்துபட்ட பரிசோதனைகளும் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது இருதய நோய் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்டநோயாளிகளின் எண்ணிக்கை, கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை, என்ஜியோகிராம் பரிசோதனைகளின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகள் முழுவதும் தொடர்ச்சியான அதிகரிப்பினை காட்டுவதோடு, படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரமானது கடந்த 2 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது கணிசமான அதிகரிப்பினைக் காட்டுகின்றது.



# இருதய அறுவைச் சிகிச்சை பிரிவு




ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையிலுள்ள இருதய அறுவைச் சிகிச்சை பிரிவானது அரசாங்கத்திற்கு சொந்தமான சிறப்பான பிரவொன்றாகும். நீண்டகாலம் எடுக்காது சகல விதத்திலுமான இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் மூன்றாம் நிலை சேவைகள் நிலையமொன்றாக இது பிரபல்யமானதாகும். இருதய அறுவைச் சிகிச்சை பிரிவு வயதான நோயாளிகளுக்கு மாத்திரமின்றி சிறு பிள்ளைகளுக்கும் இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கு அனுபவம் மிக்க விசேட பிரிவொன்றாகும்.


இலங்கையில் முதற்தடவையாக இருதய அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையொன்றின் இருதயத்தில் உரியமுறையில் அமைந்திருக்காத நாளங்கள் உரியவாறு ஒழுங்கு படுத்தப்பட்டது (transposition of great vessels) இந்த பிரிவிலாகும். இதனைவிட பல இருதய அறுவை சிகிச்சைகளை இலங்கையில் முதற் தடவையாக மேற்கொண்ட பிரிவாக இது தடம் பதித்துள்ளது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 91 | 96 | 100 | 94 | 99 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 4238 | 4069 | 4015 | 3663 | 3940 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 976 | 1030 | 964 | 776 | 923 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 58.00 | 66.24 | 57.08 | 72.50 | 56.40 |
| மரண விகிதாசாரம் (%) | 2.05 | 3.50 | 3.53 | 3.87 | 3.70 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 259 | 239 | 224 | 205 | 261 |


இருதய அறுவைச் சிகிச்சைக்காகவே ஒதுக்கப்பட்ட நவீன வசதிகளுடன் இருதய அறுவைச் சிகிச்சைக்காகவே ஒதுக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய சிறந்த சத்திரசிகிச்சை கூடங்கள் இரண்டினைக் கொண்டுள்ளது. அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட 10 படுக்கைகளைக் கொண்ட திவீர கவனிப்பு கூறொன்றும் இந்த பிரிவில் உள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் இருதய அறுவைச் சிகிச்சை பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.



# தோல் நோய் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் தோல் நோய் பிரிவு வெளிநோயாளர் சிகிச்சை, தங்கி சிகிச்சை பெறும் வழிகளில் சேவையை வழங்குகின்றது. தோல் சம்பந்தப்பட்ட சிறு அறுவைச் சிகிச்சைகள் Cauterization, Electro Cauterization and Cryotherapy சிகிச்சை வழங்கும் ஆற்றலும் அழகு தொடர்புபட்ட மருத்துவ விஞ்ஞான சிகிச்சையும் பெறுமதி சேர்க்கின்றது

தோல் சார்ந்த தொற்று, அழற்சி, புற்றுநோய் சார்பு அத்துடன் புற்றுநோய் சாராத கட்டிகள் மற்றும் அழகுக்கு முக்கியமான தோல் சார்ந்த நிலைமைகள் அடங்கலாக பரந்துபட்ட தோல் நோய் நிலைமைகளுக்கு இந்தப் பிரிவின் ஊடாக சிகிச்சை யளிக்கப்படுேகின்றது. பருக்களுக்கான சிகிச்சை, சிறுதிசுக்களை அகற்றுதல், வெண் குஷ்டம் போன்றவற்றுக்கான தோல் இடல் சிகிச்சை, பருக்களினால் தோலில் ஏற்படும் கரும்புள்ளிகளுக்கான இரசாயன சிகிச்சை, தோல் சுருங்குதல், நிறமாற் றத்துக்கான சிகிச்சை தோல் சார்ந்த திசுப் பரிசோதனை, கடுமையான தோல் நோய்களுக்கு தங்க வைத்து மருத்துவ சிகிச்சை, சிரங்கு, குஷ்டம், தொழுநோய் போன்ற நோய்களுக்கு சிகிச்சை, சிறு தோல் அறுவைச் சிகிச்சை, முடி உதிர்தல் சார்பில் மருத்துவ சிகிச்சை, நிகம் சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை இந்த பிரிவின் மூலம் வழங்கப்படும் சில சேவைகளாகும்.

| | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்கு களின் எண்ணிக்கை | 171 | 188 | 193 | 207 |
| ைகிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3659 | 4321 | 4972 | 4956 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 35 | 57 | 52 | 101 |
| மரண விகிதாசாரம் (%) | 0 | 0 | 0 | 0 |

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளமையை காட்டுவதோடு, கிளினிக்குகளில் கலந்துகொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.



# பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு



ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு III ஆம் மட்டத்துக்குரிய இலங்கையில் தரம் வாய்ந்த பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்பு பிரிவாகுமென்பதோடு, முதன்மையான கலந்தாய்வு மற்றும் பயிற்சியளிக்கும் நிலையமொன்றுமாகும்.


மருத்துவமனையில் பிறக்கும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் அதேபோன்று பிற அரசாங்க மற்றும் தனியார் மருத்துவசாலைகளில் இருந்து அனுப்பப்படும் குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.


நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு கவனிப்பு சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக நிபுணத்துவ மருத்துவ மற்றும் தாதி சேவைகளை வழங்கி 27 வாரங்கள் கொண்ட வளர்ச்சியடையாத அத்துடன் 500 கிராமுக்குக் குறைந்த எடையுடைய குழந்தைகளில் பலரை வாழவைக்கும் ஆற்றல் இந்த பிரிவுக்கு உள்ளது.

நுரையீரல் குறைபாடுகளுக்கு சுவாசிப் பதற்கு இலகுபடுத்தல், தொற்றுக்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சையளித்தல், Parenteral nuteition சிகிச்சை போன்ற கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தை நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும்போது மிக முக்கியமான நடவடிக்கைமுறைகள் சம்பந்தமாக பல வருடங்களாக பெற்ற அனுபவம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு கொண்டுள்ளது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்கு களின் எண்ணிக்கை | 54 | 46 | 46 | 44 | 48 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1104 | 982 | 1054 | 1101 | 1327 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 937 | 892 | 916 | 824 | 952 |
| படுக்கைகளின் பயன்படுத் துகை விகிதாசாரம் (%) | 57.90 | 46.08 | 83.80 | 71.10 | 71.67 |
| மரண விகிதாசாரம் (%) | 2.88 | 0.33 | 2.18 | 1.46 | 2.84 |

கடந்த 5 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் கிளினிக்குகளில் கலந்துகொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் 2012 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, படுக்கைகளின் பயன்படுத்துகை விகிதாசாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்து காணப்படுகின்றது.



# கிளினிக்குகளில் கலந்து கொண்ட





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மூட்டுவாதம் மற்றும் புனர்வாழ்வளிப்பு பிரிவின் மூலம் தங்கி சிகிச்சை பெறும் சேவையும் அதேபோன்று வாரத்தில் மூன்று நாட்கள் நடாத்தப்படும் கிளினிக் ஊடாக வெளிநோயாளர் சிகிச்சை கவனிப்பு சேவையும் வழங்கப்படுகின்றது.

பரந்துபட்ட மூட்டுகள் சார்ந்த நோய் (Osteoarthritis, Rheumatoid arthritis and Psoriatic arthritis) உட்பட திசுக்கள் சம்பந்தப்பட்ட நோய் (SLE, Mixed Connective tissue disorders) சார்பில் அனுபவம் மிக்க சிறந்த பயிற்சியுடனான மருத்துவ பதவியணியொன்றின் மூலம் நோயாளிகள் கவனிப்பு சேவையை வழங்குகின்றது. Osteoporosis மற்றும் நீண்டகால வலி அறிகுறிகளை (Chronic Pain Syndromes) சார்பிலும் இந்தப் பிரிவு விசேட கவனம் செலுத்துகின்றது. நோயாளிகளின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்புவதற்கு மூட்டுவாதம் மற்றும் புனர்வாழ்வளிப்பு பிரிவு ஏனைய பிரிவுகளுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 142 | 143 | 144 | 142 | 141 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 2332 | 3581 | 4287 | 3727 | 3806 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 128 | 115 | 118 | 65 | 115 |
| மரண விகிதாசாரம் (%) | 0 | 0 | 0 | 0 | 0 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.



# நரம்பு சார்ந்த நோய் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நரம்பியல் சார்ந்த நோய் பிரிவு மூலம் ஆபத்தான அத்துடன் ஏனைய நரம்பு சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை தங்கி அத்துடன் வெளிநோயாளர் பிரிவு மூலம் வழங்கப்படுவதோடு, நரம்பு சார்ந்த நோய் பரிசோதனைகளைச் செய்வதற்கு தேவையான சகல கருவிகளையும் வசதிகளையும் கொண்டுள்ளது.

நோயாளிகளுக்கான சிகச்சை, பரிசோதனை மற்றும் புனர்வாழ்வளிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு புறம்பான பிரிவொன்று (Stroke unit) இந்த பிரிவினால் நடாத்திச் செல்லப்படுகின்றது. நரம்பு முறைமை சார்ந்த நவீன பரிசோதனைகளுக்கான வசதிகள் electroencephalography (EEG), nerve conduction studies (NCS) electromyography (EMG) and evoked potential studies (VEP, ABR, SEP ) இந்த பிரிவு கொண்டுள்ளது. நரம்பு நோய் கவனிப்பு சேவைகளை வழங்குவதற்கு நரம்பு அறுவைச் சிகிச்சை மருத்துவ பிரிவு, மூட்டு வாதம் மற்றும் புனர்வாழ்வளிப்பு பிரிவு, ஊடுகதிர்பிடிப்பு, பௌதிக சிகிச்சை, பேச்சு சிகிச்சை போன்ற பிரிவுகளுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 97 | 96 | 96 | 102 | 93 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1355 | 2394 | 2063 | 2615 | 3245 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 167 | 140 | 81 | 128 | 340 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 72.50 | 116.86 | 14.51 | 26.90 | 52.05 |
| மரண விகிதாசாரம் (%) | 1.79 | 2.14 | 0 | 0.78 | 0.29 |

கடந்த 5 ஆண்டுகளில் 2012 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் கணிசமானளவு அதிகரித்துள்ளமையைக் காட்டி நிற்கின்றதோடு, மரண விகிதாசாரத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கும் வெற்றிகண்டுள்ளது.



# நரம்பியல் நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நரம்பியல் நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு சகலவிதமான அவசரமானதும் அவசரமற்றதுமான மூளை மற்றும் முள்ளந்தண்டு அறுவை சிகிச்சையைச் செய்வதற்கு அங்கீகாரம் பெற்ற பிரிவொன்றாகும். அறுவை சிகிச்சைக்குப் பின்னரான நோயாளிகளின் கவனிப்பு சேவைகளுக்கு Intra cranial pressure அளவிடுகை உட்பட அதிநவீன வசதிகளைக் கொண்ட ஆறு படுக்கைகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவும் ஆறு படுக்கைகளைக் கொண்ட HDU பிரிவும் நரம்பியல் நோய் அறுவை சிகிச்சைப் பிரிவில் உள்ளது.

மண்டையோடு மற்றும் முள்ளந்தண்டு சார்ந்த அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்ட நரம்பு சத்திர சிகிச்சைக்கூடம் aneurysm Surgeries, neuro-oncological Surgeries, skull base Surgeries, endoscopic pituitary Surgeries, micro vascular decompression Surgeries, reconstructive Surgeries, விபத்துக் காரணமாக ஏற்படும் சேதங்களுக்கான அறுவைச் சிகிச்சை (trauma Surgeries), முள்ளந்தண்டு சார்ந்த பல்வேறுபட்ட அறுவைச் சிகிச்சைகள் (neuro-spinal Surgeries including occipitocervical fixation, trans-oral odontoidectomy and fixation, anterior cervical discectomy and replacement, posterior lateral mass screw fixation, cervico-thoracic fixation, and posterior and transverse lumbar inter-body fusions) போன்றவற்றை மேற்கொள்வதற்கு வசதிகள் வழங்குகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 93 | 95 | 93 | 92 | 106 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 693 | 1132 | 850 | 650 | 851 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 841 | 1015 | 963 | 763 | 1052 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 363.20 | 400.59 | 82.56 | 34.00 | 35.58 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை | 196 | 340 | 194 | 67 | 156 |
| மரண விகிதாசாரம் (%) | 0.71 | 0.59 | 1.14 | 0.92 | 0.47 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை, படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகி தாசாரம், கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை, மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை என்பவற்றில் கணிசமான அதிகரி ப்பினைக் காட்டுவதோடு, மரண விகிதாசாரத்திலும் குறைவினைக் காட்டுகின்றது.



# சிறுநீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு





சிறுநீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு மிகச் சிறந்த சிறுநீரக நோய் மருத்துவ பதவியணியினரையும் உயர் தொழினுட்ப வசதிகளையும் கொண்டு உயர் தரம்வாய்ந்த நோயாளிகள் கவனிப்புச் சேவையை வழங்குகின்றது. இந்த சிறுநீரகம் சார்ந்த பல்வேறு பரிசோதனைகளை (Ultrasonic renal imaging, renal Doppler studies and ultrasound guidance invasive procedures) இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

14 படுக்கைகளைக் கொண்ட குருதி மாற்றல் பிரிவு சிறந்த பயிற்சியுட னான மருத்துவ மற்றும் தாதி பதவியணியினர்களின் மூலம் செயற்படுவதோடு, தடுப்பூசி, குருதிச் சோகை, எலும்புக் கட்டுப்பாடு மற்றும் போசாக்கு ஆலோசனைச் சேவை களின் மூலம் நோயாளிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்து கின்றது. இதுவரை வெற்றிகரமான 150 சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளை செய்துள்ள இந்த பிரிவின் வெற்றிக்கு பல்குழு மூலம் வழங்கும் அறுவை சிகிச்சைக்கு முன்னைய மற்றும் பின்னைய சேவை மிகமுக்கிய மானதாகும்.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 147 | 144 | 142 | 142 | 144 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 9031 | 9446 | 9876 | 9751 | 10351 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 5010 | 5464 | 5653 | 5462 | 4855 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 87.60 | 87.42 | 85.85 | 72.10 | 72.00 |
| மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை | 12 | 16 | 11 | 12 | 21 |
| மரண விகிதாசாரம் (%) | 0.46 | 0.71 | 0.49 | 0.48 | 0.25 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையும் கணிசமானளவு அதிகரித்துள்ளமையைக் காட்டுவதோடு, கடந்த 5 ஆண்டுகள் முழுவதிலும் மரண விகிதாசாரம் படிப்படியாகக் குறைந்துள்ளது.



# தீவிர சிகிச்சை பிரிவு




ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவு கடுமையான நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதற்காக நாட்டில் உயர்வாக அங்கீகரிக்கப்பட்ட பிரிவொன்றாகும். நோயாளிகளுக்கு வினைத்திறன்மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவையொன்றை வழங்கும் முகமாக இந்தப் பிரிவு நவீன உயிர்பாதுகாப்பு (Life Support Systems) மற்றும் Vital Sign monitoring Systems ஆகியவற்றை கொண்டுள்ளது.


தீவிர சிகிச்சை பிரிவு அனுபவம்மிக்க வதிவிட மருத்துவர்களின் மூலம் நாளொன்றின் 24 மணித்தியாலங்களும் இயங்குவதோடு கடுமையான நோய்நிலையிலுள்ள நோயாளிகளை கவனிக்கும் அத்துடன் உட்சிக்கல் வாய்ந்த தீவிர சிகிச்சைக் கருவிகளை இயக்குவதில் சிறந்த பயிற்சியையும் பெற்றுள்ள அனுபவம் மிக்க சிரேட்ட தாதி உத்தியோகத்தர்களின் மூலம் நோயாளிகள் ஒவ்வொருவரும் நெருக்கமாகக் கண்காணிக்கப்படுவர்.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 811 | 943 | 923 | 907 | 992 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 100.10 | 101.34 | 107.20 | 78.30 | 110.50 |
| மரண விகிதாசாரம் (%) | 23.80 | 19.94 | 22.32 | 21.94 | 22.98 |


சர்வதேச தரங்களுக்கு அமைவாக விசேடமாக தயாரிக்கப்பட்டதும், காலத்திற்குக்காலம் மீளமைக்கப்பட்டதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான நடவடிக்கை முறைகளுக்கமைவாக தீவிர சிகிச்சைப் பிரிவின் சகல பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த 5 ஆண்டுகளில் 2012 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.



# குருதி நோயியல் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் குருதி நோயியல் பிரிவின் மூலம் பரந்த அளவிலான நோய் நிர்ணய பரிசோதனைகள் போட்டி விலைகளின் கீழ் வழங்கப்படுகின்றது. ஒருநாளில் 24 மணித்தியாலமும் இயங்கும் குருதி நோயியல் இரசாயனகூடத்தின் ஊடாக தங்கி சிகிச்சை பெறும் அதேபோன்று வெளிநோயாளிகளுக்கும் நோய் நிர்ணய சேவை வழங்கப்படுகின்றது. இந்த பிரிவின் மூலம் நடாத்தப்படும் வெளிநோயாளர் கிளினிக் மூலம் குருதி சார்ந்த நோய்களுக்கான கவனிப்பு சேவைகள் வழங்கும் மிக செம்மையானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவைகளை வழங்குவதற்கு அதிநவீன கருவிகளைக் கொண்ட இந்த பிரிவு மருத்துவப் பட்டம் உட்பட பட்டப்பின் படிப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் இயங்குகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | - | - | 27 | 43 | 48 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | - | - | 429 | 698 | 879 |
| மேற்கொள்ளப்பட்ட பரிசோத னைகளின் எண்ணிக்கை | 209637 | 250537 | 245175 | 250878 | 304421 |
| மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 29627 | 31079 | 41862 | 54930 | 57771 |

FBC, ESR, Blood Picture போன்ற சாதாரண குருதி பரிசோதனை நிலைக்கு மேலதிகமாக குருதி சோகை, தலைசிமியா, இரத்தப்போக்கு குருதிப் புற்றுநோய் போன்ற குருதி சார்ந்த புற்றுநோய், குருதி கட்டியாதல் சம்பந்தமான நோய்கள் உட்பட குருதி சார்ந்த நோய்கள் சம்பந்தமான விசேட பரிசோதனையும் இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கையும் கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் கணிசமானளவு அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.



# நோயியல் வரலாற்று பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நோயியல் வரலாற்று பிரிவின் மூலம் மிகச் செம்மையான நோய் நிர்ணயிப்பிற்காக வரலாற்று மற்றும் உயிரணு மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. அனுபவம் மிக்க மருத்துவ இரசாயனகூட பதவியணி இயைபுள்ள கிளினிக் பிரிவுகளுடன் நெருக்கமாகச் செயலாற்றி நம்பகரமான சேவையை வழங்குகின்றது.

நோயியல் பிரிவின் மூலம் Surgical Specimens, endoscopic Specimens, bronchoscopic specimens, Specimens, fine needle aspirations, skin biopsies, renal biopsies, frozen sections போன்ற பல்வேறுபட்ட மாதிரிகள் பரிசோதனைக்குட் படுத்தப்படுகின்றன. அறுவைச் சிகிச்சைகளின் போது வழங்கப்படும் மாதிரிகள் அதிகுளிரூட்டப்பட்டு பரிசோதனைகள் செய்வதன் மூலம் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களுக்கு அறுவைச் சிகிச்சையின் போது சரியான தீர்வினை எடுப்பதற்கு இந்தப் பிரிவு உதவுகின்றது. சகல விதமான ஒழுங்கு செய்யப்பட்ட மாதிரிகள் எதிர்காலப் பரிசோதனைகளுக்காக பயன்படுத்தும் பொருட்டு 8 வருடகாலம் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்கப்படுகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கை | 5047 | 5563 | 5653 | 5386 | 5345 |
| மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 20977 | 24301 | 23484 | 22405 | 23441 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்பட்டதோடு, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அளவில் அதிகரிப்புக் காணப்பட்டது.



# நுண் உயிரினப் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நுண்உயிரினப் பிரிவின் மூலம் பக்றீரியா, பங்கஸ், வைரஸ், குருதி சார்ந்த பரந்துபட்ட நோய் நிர்ணயிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பக்றீரியா மற்றும் பங்கஸ் வளர்ச்சி, நுண்மை பரிசோதனை, தொழுநோய், சயரோகம், இறப்பை பக்றீரியா ஆகியவற்றுக்கான பரிசோதனை இந்த நுண்உயிரினப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான அனுக்க கண்காணிப்பு பரிசோதனையின் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. நுண்உயிரினப் பிரிவின் துணைப் பிரிவொன்றான Serology பிரிவினூடாக பரந்தளவில் நோய் நிர்ணயப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் பல இரசாயன கூடங்களில் இல்லாத குருதியிலுள்ள எதிர்ப்புச் சக்தியின் மட்டத்தை நிர்ணயிப்பதற்காகப் பரிசோதனை செய்யும் வசதிகளையும் இந்தப் பிரிவு கொண்டுள்ளது. நுண் உயிரினப் பிரிவு மிக சலுகை விலைகளின் கீழ் தங்கி சிகிச்சை பெறும் மற்றும் வெளிநோயாளர்களுக்கு இந்த சேவைகளை வழங்குகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட நுண்மத் தொகுதி பரிசோதனைகளின் எண்ணிக்கை | 20565 | 22342 | 22121 | 23265 | 27341 |
| மேற்கொள்ளப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி பரிசோ தனைகளின் எண்ணிக்கை | 5555 | 4857 | 3392 | 3396 | 4512 |
| மேற்கொள்ளப்பட்ட Serological பரிசோதனைகளின் எண்ணிக்கை | 84,280 | 68,932 | 76,584 | 62,595 | 60,857 |
| மேற்கொள்ளப்பட்ட சயரோக பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2,066 | 2,079 | 1,749 | 1,999 | 2,358 |

உள்ளக தரக் கட்டுப்பாடு, இரசாயனகூட ஆய்வு நிகழ்ச்சிப் பதிவு, வெளிவாரி தர மதிப்பீட்டு வேலைத் திட்டம் ஆகியவற்றின் மூலம் இந்த பிரிவினால் செய்யப்படும் பரிசோதனைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்தப் பிரிவி னூடாக பாரிய எண்ணிக்கையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதோடு, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சஞ்சிகைகளின் விஞ் ஞான ஆவணங்கள் பிரசுரிக்கப்

மேற்கொள்ளப்பட்ட நுண்மத்தொகுதி பரிசோதனைகளின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி பரிசோதனைகளின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட சயரோக பரிசோதனைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளன.



# உயிரின இரசாயனவியல் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் உயிரின இரசாயனவியல் பிரிவின் மூலம் பல்வேறுபட்ட சுமார் 114 உயிரின இரசாயனவியல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாதாரண பரிசோதனை, விசேட பரிசோதனை, அதிவிசேட பரிசோதனை ஆகியவற்றைக் கொண்ட இந்த பரிசோதனைகள் காவறையில் தங்கி சிகிச்சை பெறும் அத்துடன் வெளிநோயாளர்களுக்காக 24 மணித்தியாலமும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சகல விதமான உயிரின இரசாயனவியல் பரிசோதனைகள் சுய பகுப்பாய்வு இயந்திரங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, உள்ளக வெளிவாரி தரக்கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் அவற்றின் செம்மையான தன்மையும் நம்பகத் தன்மையும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இரசாயனகூட பரிசோதனைகள் யாவும் சிறந்த பயிற்சியையும் தகைமையையும் கொண்ட இரசாயனகூட பதவியணியொன்றின் மூலம் செய்யப்படுகின்றது.

உயிரின இரசாயனவியல் பிரிவின் மூலம் குருதி குளுக்கோஸ் பரிசோதனை, குருதியிலுள்ள கொழுப்பு பரிசோதனை, சிறுநீரக, இரைப்பை சார்ந்த பரிசோதனை போன்ற சாதாரண உயிரின இரசாயனவியல் பரிசோதனைகளும் தைரோயிட் ஹோர்மோன் பரிசோதனையும், குருதியிலுள்ள இரும்புச்சத்து பரிசோதனை புற்றுநோய் நிலைமை போன்றவற்றிற்கான குருதி பரிசோதனை, இனப்பெருக்க ஹோர்மோன் பரிசோதனை Troponin T மற்றும் I பரிசோதனை, hCG பரிசோதனை போன்ற விசேட உயிரின இரசாயனவியல் பரிசோதனைகளும், Serum Protein electrophoresis, urine Protein electrophoresis, Immuno - typing போன்ற அதிவிசேட உயிரின இரசாயனவியல் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 397042 | 396226 | 379259 | 401098 | 463134 |
| மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 12041 | 13111 | 14920 | 18520 | 24015 |

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சாதாரண மற்றும் விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.



# கதிரியல் பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் கதிரியல் பிரிவின் மூலம் பாதுகாப்பானதும் செம்மையானதுமான நோய் நிர்ணயிப்பு மற்றும் சிகிச்சை கதிரியல் சேவைகள் மிகப் போட்டிகரமான கட்டணங்களின் கீழ் தங்கி சிகிச்சை பெறும் மற்றும் வெளி நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. நன்றாகப் பயிற்சி பெற்று வினைத்திறன் மிக்க பதவியணியொன்றின் மூலம் நாளொன்றின் 24 மணித்தியாலமும் கதிரியல் பிரிவு சேவையை வழங்குகின்றது. மிக சிறந்த சேவையை வழங்குவதற்காக நவீன, அதிதொழினுட்ப கருவிகளை இந்தப் பிரிவு கொண்டுள்ளது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ஊடுகதிர் பிடிப்பு பரிசோதனைகளின் எண்ணிக்கை | 59685 | 50140 | 46738 | 46975 | 41895 |
| மேற்கொள்ளப்பட்ட Ultra Sound ஸ்கான் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 7816 | 8834 | 8906 | 8519 | 9240 |
| மேற்கொள்ளப்பட்ட CT ஸ்கான் பரிசோதனைகளின் எண்ணிக்கை | - | 4213 | 4728 | 5568 | 6406 |
| மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1743 | 2041 | 1931 | 1699 | 2096 |

இலக்கமுறை ஊடுகதிர்பிடிப்பு பரிசோதனை, CT ஸ்கான் பரிசோதனை (Spiral CT Scanning With 3D images and angiography facilities) , (Colour Doppler studies), மார்பகப் பரிசோதனை (mammography) குருதிநாள தொடர்பு பரிசோதனை போன்றனை இந்த கதிரியல் (Digital Substraction angiography) பிரிவினால் வழங்கப்படும் சில சேவைகளாகும். இந்த பிரிவினூடாக காவறை மற்றும் தீவிர கண்காணிப்பு பிரிவுகளிலுள்ள நோயாளிகளுக்கு நடமாடும் (fluoroscopy) ஊடுகதிர்

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட Ultra Sound ஸ்கான் பரிசோதனைகளின் எண்ணிக்கையும் CT ஸ்கான் பரிசோதனைகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளன.



# இரத்த வங்கி





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் இரத்த வங்கி தேசிய இரத்த வங்கியுடன் கூட்டிணைந்து குருதி மற்றும் குருதி சார்ந்த பதார்த்தங்களை தேவையான அளவு பாதுகாப்பாகவும் உயர் தரத்திலும் வழங்கி பாதுகாப்பானதும் செம்மையானதுமான சேவையை வழங்கப்படுகின்றது. குருதி வழங்வோரிடமிருந்து பெறப்படும் குருதிகள் உயர் தரத்தில் பேணுவதற்கு குருதி வங்கியினால் நவீன தொழினுட்பக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. குருதி பிரித்தல் பரிசோதனை, ஒப்பிடல் பரிசோதனை என்பன தேர்ச்சிமிக்க பதவியணியினால் 24 மணித்தியாலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குருதி எதிர்விளைவுப் பரிசோதனை, குருதிசார் பரிசோதனை, நேரடி மற்றும் மறைமுக Coombs பரிசோதனை குருதி மாற்றல், பிளஸ்மா பரிமாற்றம், Veenesection மற்றும் தன்னார்வ அடிப்படையில் குருதி பெறுதல் என்பன இரத்த வங்கியினால் வழங்கப்படும் சேவைகளாகும்.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்ட குருதி மாதிரிகளின் எண்ணிக்கை | - | 5520 | 6282 | 5643 | 5273 |
| வழங்கப்பட்ட செங்குருதி சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கை | - | 6201 | 5899 | 5815 | 6161 |
| மேற்கொள்ளப்பட்ட ABO மற்றும் Rh grouping பரிசோதனைகளின் எண்ணிக்கை | 28887 | 30114 | 41400 | 31674 | 25754 |

கடந்த 2 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் குருதி வழங்குபவர்களிடமிருந்து பெற்ற குருதி அளவுகள் குறைந்து காணப்பட்டாலும் வழங்கப்பட்ட செங்குருதி சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளன.



# கட்டணம் செலுத்தும் காவறை




தரம்மிக்க நோயாளிகள் கவனிப்பு சேவையை மிக வசதியான சூழலில் வழங்கும் பொருட்டு 1 ஆம் 2 ஆம் வகுப்புகளைச் சேர்ந்த காவறைகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை கொண்டுள்ளது.


முதலாம் வகுப்பு கட்டணம் செலுத்தும் காவறை குளிரூட்டப்பட்ட தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி வசதிகளுடனான 18 தனி அறைகளையும் இரண்டாம் வகுப்பு கட்டணம் செலுத்தும் காவறை பொது அறைகளைக் கொண்டும் உள்ளன. நோயாளிகளின் விருப்பத்திற்கேற்றவாறு தெரிவு செய்யக்கூடிய உணவுகள் இந்த கட்டணம் செலுத்தும் காவறைகளுக்கு வழங்கப்படுகின்றன. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் சேவையாற்றும் எந்தவொரு நிபுணத்துவ மருத்துவரின் கீழும் இந்த கட்டணம் செலுத்தும் காவறைத் தொகுதிக்கு அனுமதி பெறுவதற்கு வாய்ப்புள்ளது. மருத்துவமனையின் படுக்கைகளின் பாவனை குறைந்திருந்தபோதிலும்கூட கட்டணம் செலுத்தும் காவறைகளின் பாவனையின் நூற்றுவீதம் மிக உயர்ந்த அளவில் இருந்தது.

2012 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பு கட்டணம் செலுத்தும் காவறைகளின் படுக்கைகளின் பாவனை 105.29 சதவீதமான உயர்நிலையில் நிலவியது. கட்டணம் செலுத்தும் காவறைகளுக்கு நிலவிய கோரிக்கை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு


| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6945 | 7389 | 6993 | 6306 | 6543 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 70.77 | 72.39 | 65.31 | 60.80 | 64.64 |
| மரண விகிதாசாரம் (%) | 0.60 | 0.23 | 0.30 | 0.22 | 0.34 |

2012 ஆம் ஆண்டில் 19 ஆகவிருந்த தனி அறைகள் 29 வரை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.



# மருத்துவ பரிசோதனை பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மருத்துவ பரிசோதனை பிரிவு இலங்கையின் அரசாங்க மருத்துவ மனையொன்றில் தாபிக்கப்பட்டுள்ள இத்தகைய ஒரே பிரிவாகும். பல்வேறுபட்ட மருத்துவ பரிசோதனைகளும் இரசாயனக்கூட பரிசோதனைகளுக்கும் ஆட்படுவதன் மூலம் ஆரம்ப மற்றும் கண்டறியப்படாத நிலையிலுள்ள நோய்களை கண்டறிவதற்கு இந்த மருத்துவப் பரிசோதனை பிரிவு வசதியளிக்கின்றது. சரியான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் நோய் நிர்ணய பரிசோதனைகள் மூலம் சுகாதார பிரச்சினைகளை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கும் உரிய சிகிச்சைகள் மூலம் அவற்றின் உட்சிக்கல் நிலைமைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மருத்துவ பரிசோதனைகள் யாவும் அனுபவம் மிக்க சிரேட்ட மருத்துவர்களினால் மேற்கொள்ளப்படுவதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் இயைபுள்ள நிபுணத்துவ மருத்துவர்களிடம் நோயாளிகள் தொடர்புபடுத்தப்படுகின்றனர்.

பல்வேறுபட்ட வயதெல்லைகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் அமைவாகத் தயாரிக்கப்பட்ட பொதிகளை இந்த மருத்துவ பரிசோதனை பிரிவு முன்வைத்துள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மருத்துவ பரிசோதனை பிரிவு அமைச்சுக்களின் செயலாளர்கள், தலைவர்கள், தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் அடங்கலாக உயர் உத்தியோகத்தர்களின் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மத்திய நிலையமாகும்.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை (FEB) | 7604 | 3246 | 6659 | 4086 | 2723 |
| மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை (நிறைவேற்றுத் தரம்) | 1096 | 906 | 777 | 724 | 716 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.




# ENDOSCOPY பிரிவு




ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் ENDOSCOPY பிரிவின் மூலம் Upper Gastro-Intestinal Endoscopy, Lower Gastro-Intestinal Endoscopy, Bronchoscopy, Fiber-Optic Laryngoscopy, Oesophageal Variceal Banding, Endoscopic Retrograde Cholecysto-Pancreography போன்ற பரந்துபட்ட நோய் நிர்ணய பரிசோதனைகளும் சிகிச்சைகளும் ஏற்கக்கூடிய விலையில் வழங்குகின்றது. ENDOSCOPY பிரிவு நவீன தொழினுட்பக் கருவிகளையும் தேர்ச்சிமிக்க பதவியணியின் மூலமும் வினைத்திறன்மிக்கதும் நம்பத்தகுந்த சேவையையும் வழங்குகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட Bronchoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | 46 | 41 | 35 | 25 | 27 |
| Upper GI Endoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1579 | 1832 | 1754 | 1759 | 1897 |
| Colonoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | 380 | 531 | 552 | 653 | 648 |
| Fibre-Optic Laryngoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | - | 313 | 290 | 342 | 407 |
| Oesophageal Variceal Banding சிகிச்சை | 203 | 166 | 210 | 226 | 228 |
| ERCP பரிசோதனைகளின் எண்ணிக்கை | 33 | 21 | 24 | 15 | 13 |

2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட Bronchoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை, Upper GI Endoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை, Fibre-Optic Laryngoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை, Oesophageal Variceal Banding சிகிச்சை என்பன கணிசமான அளவு அதிகரித்துள்ளன.



# ECG பிரிவு





ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் ECG பிரிவின் மூலம் நாளொன்றின் 24 மணித்தியாலமும் காவறைகளில் தங்கி சிகிச்சை பெறும் அத்துடன் வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு ECG, EEG, EMG சேவைகளை வழங்குகின்றது.

இந்த ECG பிரிவு நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்தியும் மற்றும் பயிற்சிபெற்ற தேர்ச்சிமிக்க பதவியணியினால் செம்மையானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையை நோயாளிகளுக்கு வழங்குகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ECG பரிசோதனைகளின் எண்ணிக்கை | 36086 | 37960 | 38166 | 36156 | 38431 |
| மேற்கொள்ளப்பட்ட EEG பரிசோதனைகளின் எண்ணிக்கை | - | 487 | 446 | 487 | 670 |
| மேற்கொள்ளப்பட்ட EMG பரிசோதனைகளின் எண்ணிக்கை | - | 863 | 860 | 1063 | 1362 |

கடந்த 5 ஆண்டுகளில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ECG, EEG, EMG பரிசோதனைகளின் அளவு கணிசமாக அதிகரித்துள்ளது.



# வெளிநோயாளர் பிரிவும் அவசர சிகிச்சைப் பிரிவும்




திங்கள் முதல் சனிக்கிழமை வரை மு.ப.8.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் நடாத்தப்படும் வெளிநோயாளர் சேவையின் மூலம் மருத்துவமனைக்குவரும் வெளிநோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. தகைமையுடைய சிரேட்ட மருத்துவ உத்தியோகத்தர்களினால் நோயாளிகள் பரிசோதிக்கப்படுவதோடு, தேவைப்படுமிடத்து நிபுணத்துவ மருத்துவர்களுக்கு தொடர்புபடுத்தப்படுவார்கள்.


ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவின் மூலம் வினைத்திறன் மிக்கதும் அவசர கவனிப்புச் சேவையும் நாளொன்றின் 24 மணித்தியாலம் முழுவதும் வழங்கப்படுகின்றது. நவீன மருத்துவ உபகரணங்களைக் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு நவீன அங்கீகரிக்கப்பட்ட தொழினுட்ப முறைகள் நோயாளர் கவனிப்பு சேவையின் போது பயன்படுத்தி சிக்ச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை சந்தர்ப்பங்களில் உயர் சிகிச்சையை வழங்குகின்றது.

வெளிநோயாளர் பிரிவு இயங்காத சந்தர்ப்பங்களில் அவசர சிகிச்சைப் பிரிவின் மூலம் வெளிநோயாளர் சேவையும்கூட வழங்கப்படுகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 16895 | 16222 | 15536 | 16434 | 16532 |
| அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 38005 | 40452 | 38012 | 36898 | 42883 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கையும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.



# போசாக்குப் பிரிவு




ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் போசாக்குப் பிரிவின் மூலம் உயர் தகைமைகளைக் கொண்ட அனுபவமிக்க போசாக்காளர் ஒருவரின் கீழ் சிறந்த சேவை வழங்கப்படுகின்றது. anthropometric, serological அத்துடன் தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான போசாக்கு ஆலோசனைச் சேவையை வழங்கும் ஆற்றல் இந்தப் பிரிவுக்குள்ளது.


பல்வேறுபட்ட நோய் நிலைமைகளின் கீழ் காவறைகளில் தங்கியுள்ள நோயாளிகள், endocrinology கிளினிக்குகள் மூலம் தொடர்புபடுத்தப்படும் நோயாளிகள், போசாக்குக் குறைபாடுடைய அத்துடன் மிகைப் போசாக்கு நிலையில் உள்ள குழந்தைகள், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு உணவு மற்றும் போசாக்கு ஆலோசனைகளும் சிபாரிசுகளும் இந்த பிரிவினூடாக வழங்கப்படுகின்றது.

காவறைகளில் தங்கியுள்ள நோயாளிகளின் உணவு வேளைகளைத் திட்டமிடுதல் நோயாளிகளுக்கு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துவதற்கு இந்த போசாக்குப் பிரிவு சம்மந்தப்படுகின்றது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| தொடர்புபடுத்தப்பட்ட காவறைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை | - | 800 | 738 | 903 | 973 |
| தொடர்புபடுத்தப்பட்ட வெளி நோயாளிகளின் எண்ணிக்கை | - | 806 | 825 | 844 | 931 |

கடந்த 4 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் போசாக்குப் பிரிவுக்கு தொடர்புபடுத்தப்பட்ட காவறைகளில் தங்கி சிகிச்சை பெற்ற அத்துடன் வெளி நோயாளர் பிரிவு நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்துள்ளது.




# நிபுணத்துவ மருத்துவ ஆலோசனைச் சேவை




நோயாளிகளின் வசதி கருதி ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையினால், மருத்துவமனையின் நிபுணத்துவ மருத்துவர்களின் பங்குபற்றுதலுடன் நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை சேவை நடாத்தப்படுகின்றது. வாரநாட்களில் பி.ப.4.00 மணியிலிருந்து மருத்துவ மனையிடத்தில் இந்த சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மருத்துவமனையின் பல நிபுணத்துவ மருத்துவர்களின் பங்குபற்றுதலுடன் வழங்கப்படும் சேவையினூடாக மருத்துவமனையினால் வழங்கப்படும் பெரும்பாலான மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவ சேவைகள் தழுவப்படுகின்றன.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை | 13178 | 15869 | 14205 | 10205 | 9522 |

2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டுவரை நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்துள்ளமை காணக்கூடியதாகவுள்ளதோடு, ஆகக்குறைந்த அளவு 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



# 4. நிதி அறிக்கைகள்



# 4.1 ஐந்தொகை

2012 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுக்கான ஐந்தொகை

| | குறிப்பு | ரூபா | ரூபா | 2012(ரூபா) | 2012(ரூபா) |
|---|---|---|---|---|---|
| **மூலதன, ஒதுக்கங்கள் பங்களிப்பு** | | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | | | |
| யப்பான் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மானியம் | | | 978,976,227 | | 978,976,227 |
| மூலதன ஒதுக்கம் (கிடைத்த பிற மானியங்கள்) | | | 37,848,935 | | 37,848,935 |
| மூலதன ஒதுக்கம் | | | 2,280,000 | | 2,280,000 |
| பிற மானியங்கள் | | | 8,645,000 | | |
| | | | | 1,027,750,162 | 1,019,105,162 |
| பின்போடப்பட்ட வருமானம் (இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடை) | | | | 215,553,160 | 260,735,556 |
| | | | | 1,243,303,322 | 1,279,840,718 |
| வருமான மற்றும் செலவினக் கணக்கு | | | | (965,660,685) | (847,707,652) |
| | | | | 277,642,637 | 432,133,066 |
| **உள்ளடக்கம்** : | | | | | |
| **நிலையான சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் | குறிப்பு 01 | | 842,159,606 | | 662,145,463 |
| தளபாடங்களும் பிறவும் | குறிப்பு 01 | | 99,764,102 | | 142,173,240 |
| | | | 941,923,709 | 941,923,709 | 804,318,703 |
| **கூட்டுக : நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| குறுகியகால முதலீடு | குறிப்பு 02 | 10,045,000 | | | 10,045,000 |
| கையிருப்பு | குறிப்பு 03 | 151,594,888 | | | 136,457,613 |
| கடன்பட்டோர், வைப்புகள், முற்கொடுப்பனவுகள் | குறிப்பு 04 | 219,124,167 | | | 148,434,853 |
| வங்கி மற்றும் நிதி நிலுவை | குறிப்பு 05 | 12,379,588 | 393,143,642 | | 120,169,732 |
| **கழிக்குக : நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| கடன் வழங்குபவர் மற்றும் சேரும் கொடுப்பனவுகள் | குறிப்பு 06 | | 1,057,424,714 | (664,281,071) | (787,292,835) |
| | | | | 277,642,637 | 432,133,066 |

# 4.2 வருமான கூற்று

2012 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுக்கான வருமான கூற்று

| | | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| வருமானம் | குறிப்பு 07 | 1,852,603,969 | 1,689,268,276 |
| பிற இயங்கு வருமானம் (வட்டி) | | 5,376,150 | 4,443,027 |
| | | 1,857,980,119 | 1,693,711,303 |
| மூலப்பொருட்கள் மற்றும் நகர்வுக்குரிய செலவுகள் | குறிப்பு 08 | 600,359,347 | 516,694,280 |
| பதவியணி செலவுகள் | குறிப்பு 09 | 1,065,492,193 | 946,558,795 |
| பெறுமானத்தேய்வு, தவணைமுறை கடன்கரைப்பு | குறிப்பு 10 | | (22,322,459) |
| பிற இயங்கு செலவுகள் | குறிப்பு 11 | 304,215,593 | 269,826,508 |
| | | 1,970,067,133 | 1,710,757,124 |
| இலாபம் / நட்டம் - இயக்கம் | | (112,087,014) | (17,045,821) |
| நிதிச் செலவு | குறிப்பு 12 | 2,756,512 | 2,207,459 |
| பிற செலவுகள் | குறிப்பு 13 | - | |
| வரி செலுத்துவதற்கு முன்னரான இலாபம் / நட்டம் | | (114,843,526) | (19,253,280) |
| வருமான வரி | | 4,330,000 | 8,642,497 |
| வரிசெலுத்தியதன் பின்னரான இலாபம் / நட்டம் | | (119,173,526) | (27,895,777) |
| இலாப - நட்ட கணக்கு முன்கொணரப்பட்டது | குறிப்பு 14 | (846,487,163) | (819,811,879) |
| இலாப - நட்ட கணக்கு மறுபக்கம் கொண்டு செல்லப்பட்டது | | (965,660,688) | (847,707,656) |

# 4.3 நிதி ஓட்ட கூற்று

2012 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி ஓட்ட கூற்று

| | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|
| **தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்த தொகை** | | |
| ஆண்டிற்கான இலாபம் / நட்டம் | (119,173,526) | (27,895,776) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | 1,220,492 | 5,643,188 |
| மூலதன தவணை முறைக்கடன் கரைப்பு | 110,397,396 | (140,202,500) |
| பெறுமானத் தேய்வு | (110,397,396) | 119,130,311 |
| பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு | 33,603,908 | 37,425,242 |
| காலவதியாகிய பொருட்களுக்கான நிதி எற்பாடு | 768,709 | 1,351,858 |
| இழிந்த படுகடனுக்கான நிதி ஏற்பாடு | | |
| முதலீட்டு வருமானம் (வட்டி) | (5,376,150) | (4,443,027) |
| தொழிற்படு மூலதன சீராக்கல்களுக்கு முன்னரான இலாபம் / நட்டம் | (88,956,567) | (8,990,704) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கான சீராக்கல்கள் | | |
| கையிருப்பு அதிகரித்தல் / குறைவடைதல் | (15,905,984) | (8,079,049) |
| கடன்பட்டோர் அதிகரித்தல் / குறைவடைதல் | (70,689,314) | (14,854,645) |
| கடன் வழங்குபவர் மற்றும் செலுத்தப்பட வேண்டிய கடன் அதிகரித்தல் / குறைவடைதல் | 249,772,251 | (11,051,115) |
| தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்த வருமானம் / செலவினம் | 74,220,386 | (42,975,513) |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (13,244,280) | (11,540,418) |
| தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்த தேறிய தொகை | 60,976,106 | (54,515,931) |
| **முதலீட்டு செயற்பாட்டின் மூலம் பெற்ற நிதி ஓட்டம்** | | |
| மூலதனக் கொடை (கிடைத்தவை) | 71,000,000 | 236,785,000 |
| சொத்துக்கள், இயந்திரங்கள், கருவிகள் கொள்வனவு செய்தல் | (245,142,402) | (119,810,123) |
| முதலீடுகளிலிருந்து கிடைத்த தேறிய ஓட்டம் | (174,142,402) | 116,974,877 |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம்** | | |
| வட்டி வருமானம் | 5,376,150 | 4,443,027 |
| நிதிச் செயற்பாடுகளின் மூலம் கிடைத்த தேறிய நிதி ஓட்டம் | 5,376,150 | 4,443,027 |
| **நிதி மற்றும் நிதிசார்ந்த சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு** | | |
| ஆண்டிற்கான நிதி மற்றும் நிதிசார்ந்த சொத்துக்கள் | (107,790,146) | 66,901,973 |
| ஆண்டின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிசார்ந்த சொத்துக்கள் | 120,169,734 | 53,267,759 |
| | 12,379,588 | 120,169,732 |
| **நிதி மற்றும் நிதிசார்ந்த சொத்துக்களின் பகுப்பாய்வு** | | |
| வங்கி மற்றும் கையிலுள்ள தொகை | 24,086,002 | 120,169,879 |
| வங்கி மேலதிகப் பற்று | (11,706,414) | (147) |
| | 12,379,588 | 120,169,732 |

# 4.4 கணக்குகளுக்கான குறிப்புகள் - 2012

## குறிப்பு 1 : நிலையான சொத்துக்கள் (ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், தளபாடங்கள்)

| | மருத்துவமனையின் காணி 26 ஏக்கர் (ரூபா) | கட்டடம் யப்பான் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடை (ரூபா) | பிற கட்டடங்கள் (ரூபா) | யப்பான் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த பிற கொடை (ரூபா) | தளபாடங்களும் பொருத்துகைகளும் (ரூபா) | மின் உபகரணங்கள் (ரூபா) | குளிர்சாதன பெட்டிகளும் பிரதி எடுத்தல் இயந்திரங்களும் (ரூபா) | மருத்துவ உபகரணங்களும் கருவிகளும் (ரூபா) | வாகனங்கள் (ரூபா) | கணனி மென்பொருட்கள் (ரூபா) | மருத்துவமனை சமையலறை புனரமைப்பு (ரூபா) | நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளுக்கான மூலதனம் (ரூபா) | மொத்தம் 2012 (ரூபா) | மொத்தம் 2011 (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகுசெலவு / மீள் மதிப்பிடல் | | | | | | | | | | | | | | |
| சனவரி 01 ஆம் திகதி | 15,015,732 | 453,028,634 | 331,151,717 | 416,490,078 | 16,888,140 | 70,289,810 | 17,407,235 | 1,227,988,561 | 32,415,282 | 738,000 | 28,760,185 | 66,809,643 | 2,676,983,017 | 2,557,172,894 |
| கூட்டுக | | | 30,595,384 | | 3,882,467 | 11,185,777 | 366,320 | 203,264,490 | 999,000 | 10,000 | | 31,912,530 | 282,215,968 | 135,490,155 |
| பரிமாற்றல் / விற்பனை | | | | | | | | | 1,425,000 | | | 34,213,566 | 35,638,566 | 15,680,032 |
| திசெம்பர் 31 ஆம் திகதி | 15,015,732 | 453,028,634 | 361,747,101 | 416,490,078 | 20,770,607 | 81,475,587 | 17,773,555 | 1,431,253,051 | 31,989,282 | 748,000 | 28,760,185 | 64,508,607 | 2,923,560,419 | 2,676,983,017 |
| **பெறுமானத் தேய்வு** | | | | | | | | | | | | | | |
| சனவரி 01 ஆம் திகதி | | 244,635,465 | 77,983,925 | 416,490,077 | 12,751,315 | 33,344,559 | 14,731,389 | 1,042,419,792 | 26,232,045 | 650,000 | 3,425,747 | | 1,872,664,314 | 1,753,534,004 |
| ஆண்டின் பெறுமானத் தேய்வு | | 9,060,573 | 6,734,161 | | 1,660,997 | 4,530,682 | 1,391,662 | 83,301,847 | 2,257,455 | 22,000 | 1,438,019 | | 110,397,396 | 119,130,310 |
| விற்பனை பெறுமானத் தேய்வு | | | | | | | | | 1,425,000 | | | | 1,425,000 | |
| திசெம்பர் 31 ஆம் திகதி | - | 253,696,038 | 84,718,086 | 416,490,077 | 14,412,312 | 37,875,241 | 16,123,051 | 1,125,721,639 | 27,064,500 | 672,000 | 4,863,766 | - | 1,981,636,710 | 1,872,664,314 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | | | | | | | | | | | | | | |
| சனவரி 01 ஆம் திகதி | 15,015,732 | 208,393,169 | 253,167,792 | 1 | 4,136,825 | 36,945,251 | 2,675,846 | 185,568,769 | 6,183,237 | 88,000 | 25,334,438 | 66,809,643 | 804,318,703 | 803,638,890 |
| திசெம்பர் 31 ஆம் திகதி | 15,015,732 | 199,332,596 | 277,029,015 | 1 | 6,358,295 | 43,600,346 | 1,650,504 | 305,531,412 | 4,924,782 | 76,000 | 23,896,419 | 64,508,607 | 941,923,709 | 804,318,703 |

| | | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| **குறிப்பு 02 : முதலீடு** | | | |
| **குறுகியகால முதலீடு - அழைப்புச் சேமிப்பு** | | | |
| இலங்கை வங்கி - அழைப்புச் சேமிப்பு கணக்கு | | 10,000,000 | 10,000,000 |
| தேசிய சேமிப்பு வங்கி (பதவியணி பாதுகாப்பு வைப்பு) | | 45,000 | 45,000 |
| | | 10,045,000 | 10,045,000 |
| **குறிப்பு 03 : கையிருப்பு** | | | |
| பொது களஞ்சியசாலை | | 11,241,718 | 8,960,896 |
| மருந்து களஞ்சியசாலை | | 17,254,635 | 19,132,142 |
| அறுவை சிகிச்சை பாவனைப் பொருட்களுக்கான களஞ்சியசாலை | | 50,377,314 | 43,582,853 |
| கட்டுத்துண்டு பொருட் களஞ்சியசாலை | | 7,534,218 | 7,659,845 |
| EME களஞ்சியசாலை | | 8,759,846 | 9,215,702 |
| கதிரியல் பிரிவின் களஞ்சியசாலை | | 3,672,728 | 3,030,164 |
| நோய் இரசாயனக்கூட, இரத்த வங்கி களஞ்சியசாலை | | 4,037,518 | 2,691,774 |
| பொது பொருள் மற்றும் துணை களஞ்சியசாலை | | 4,337,771 | 4,357,998 |
| மருந்து மற்றும் அறுவை சிகிச்சை பொருள் துணை களஞ்சியசாலை | | 47,215,298 | 39,893,687 |
| | | 154,431,047 | 138,525,061 |
| கழிக்குக : காலவதியாகிய பொருட்களுக்கான ஏற்பாடு | | 2,836,159 | 2,067,450 |
| | | 151,594,888 | 136,457,611 |
| **குறிப்பு 04 : கடன்பட்டோர் , வைப்புக்கள், முற்கொடுப்பனவுகள்** | | | |
| நானாவித வைப்புகள் | அட்டவணை 01 | 5,705,781 | 5,805,781 |
| கிடைக்க வேண்டிய வருமானம் | அட்டவணை 02 | 5,734,370 | 4,869,357 |
| ஊழியர் இடர்கடன் | அட்டவணை 03 | 97,184,211 | 76,757,243 |
| ஊழியர் பாடசாலை புத்தக முற்பணம் | | 2,700 | - |
| விசேட கடன் - வெள்ளப்பெருக்கு அனர்த்தம் | | 4,125 | 28,875 |
| விசேட கடன் - கிரிகட்குழு | | 562,500 | - |
| ஊழியர் சம்பள முற்பணம் | அட்டவணை 04 | - | 84,999 |
| ஊழியர் விழா முற்பணம் | அட்டவணை 05 | 1,131,500 | 1,104,000 |
| குருதிமாற்றல் சலுகை நிதியக் கணக்கு | | 99,600 | - |
| பல்வேறு கடன்பட்டோர் | அட்டவணை 06 | 18,242,133 | 8,596,193 |
| கிடைக்க வேண்டிய மருத்துவமனைக் கட்டணம் | அட்டவணை 07 | 85,783,498 | 46,064,648 |
| சுகாதார அமைச்சு - தாதி கல்லூரியின் கழிவு நீர் செலவு | | 5,907,011 | 5,907,011 |
| கிடைக்க வேண்டிய மரணப் பணிக்கொடை | | 49,991 | 500,000 |
| கிளினிக் அமைப்பு | | 44,463 | 44,463 |
| | | 220,451,884 | 149,762,570 |
| கழிக்குக : இழிந்த படுகடன் ஒதுக்குகை | | 1,327,716 | 1,327,716 |
| | | 219,124,167 | 148,434,854 |

| | | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| **குறிப்பு 05 : வங்கி மற்றும் நிதி நிலுவை** | | | |
| ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் க்ரிண்ட்லய்ச் வங்கி | | 93,615 | 93,615 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு இலக்கம் - 01 | | (11,706,267) | 103,658,056 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு இலக்கம் - 02 | | 4,260,000 | 160,000 |
| ஹட்டன் நஷனல் வங்கி - 20 ஆவது வருட கணக்கு | | 20 | 20 |
| ஹட்டன் நஷனல் வங்கி | | 7,261,268 | 1,274,578 |
| ஹட்டன் நஷனல் வங்கி - அழைப்பு சேமிப்பு கணக்கு | | 5,571,000 | 11,126,000 |
| இலங்கை வங்கி - குருதி மாற்றல் நடைமுறைக் கணக்கு | | 4,626,378 | 637,775 |
| கையிருப்புத் தொகையும் கட்டுநிதி கணக்கும் | | 2,226,709 | 3,172,825 |
| முத்திரை தீர்வையும் சிறு கட்டுநிதியும் | | 47,010 | 47,010 |
| ஹட்டன் நஷனல் வங்கி - குருதி மாற்றல் நடைமுறைக் கணக்கு | | (147) | (147) |
| | | 12,379,588 | 120,169,732 |
| **குறிப்பு 06 : நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| கடன் வழங்குபவர், திரண்ட செலவு | | 703,598,970 | 460,041,692 |
| பிற பொறுப்புக்கள் | | 29,144,862 | 22,929,888 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | | 324,680,882 | 304,321,255 |
| | | 1,057,424,714 | 787,292,835 |
| **குறிப்பு 06-A : தர மாற்றங்களுக்கான கூற்று** | | | |
| **மூலதனகொடை** | | | |
| கருத்திட்டத்திற்கு யப்பான் அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த கொடை | | 928,851,297 | 928,851,297 |
| யப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான நிறுவனத்திடமிருந்து கிடைத்த கொடை | | 50,124,930 | 50,124,930 |
| பிற்போடப்பட்ட வருமானம் (இலங்கை அரசாங்கததின் மூலதன கொடை | குறிப்பு C | 215,553,160 | 260,735,556 |
| மூலதன ஒதுக்கம் | | 2,280,000 | 2,280,000 |
| Hemodialysis இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக கிடைத்த நன்கொடை | | 799,233 | 799,233 |
| யப்பான் கஜிமா நிறுவனத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் | | 260,000 | 260,000 |
| யப்பான் ஒலிம்பஸ் நிறுவனத்திடமிருந்த கிடைத்த நன்கொடை | | 79,700 | 79,700 |
| இருதய நோய் பிரிவுக்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கிடைத்த கொடை | | 30,000,000 | 30,000,000 |
| சனாதிபதி நிதியத்திலிருந்து கிடைத்த கொடை | | 6,710,000 | 6,710,000 |
| பிற நன்கொடைகள் - நிதியும் உபகரணங்களும் | | 8,645,000 | |
| | | 1,243,303,320 | 1,279,840,716 |

| | | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| **குறிப்பு C : பிற்போடப்பட்ட வருமானம் (இலங்கை அரசாங்கத்தின் மூலதனக் கொடை)** | | | |
| சனவரி 1 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | | 254,950,556 | 164,153,056 |
| கூட்டுக : ஆண்டினுள் கிடைத்த மூலதனக் கொடைகள் | | 71,000,000 | 231,000,000 |
| கழிக்குக : மூலதன கொடைமுறை கடன் கரைப்பு | | 110,397,396 | 140,202,500 |
| திசெம்பர் 1 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | | 215,553,160 | 254,950,556 |
| | | | |
| **கடன் வழங்குபவர் மற்றும் திரண்ட செலவுகள்** | | | |
| திரண்ட செலவு | அட்டவணை 11 | 86,969,893 | 70,358,186 |
| கணக்காய்வு திணைக்களம் | | 2,328,571 | 2,282,901 |
| வர்த்தக கடன் வழங்குபவர் | அட்டவணை 12 | 261,563,454 | 38,238,377 |
| நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | | 21,245,734 | 26,045,734 |
| மருத்துவ வழங்கல் பிரிவு | | 331,491,318 | 323,116,494 |
| | | 703,598,970 | 460,041,692 |
| | | | |
| **குறிப்பு 07 :** | | | |
| நோயாளிகள் கவனிப்பு சேவை மூலம் கிடைத்த வருமானம் | | 993,119,451 | 828,235,820 |
| அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மீண்டுவரும் கொடை | | 827,234,000 | 837,000,000 |
| பிற வருமானம் | | 32,250,519 | 24,032,457 |
| | | 1,852,603,969 | 1,689,268,277 |

| | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 06-A : பிற வருமானங்கள்** | | |
| நோயாளர் வண்டிக் கட்டணம் | 1,412,608 | 930,691 |
| நோயாளிகளைக் கவனிப்போர் / வருகைதருவோர் | 3,881,172 | 1,752,333 |
| ஊழியர் உணவு வருமானம் | 819,691 | 755,485 |
| ஊழியர் வாடகை மற்றும் மின்சார வருமானம் | 2,313,697 | 1,975,676 |
| மருத்துவமனை சிற்றுண்டிச்சாலை - வாடகை | 960,000 | 960,000 |
| மருத்துவமனை சிற்றுண்டிச்சாலை - மின்சாரம் | 662,968 | 463,212 |
| மருத்துவமனை வங்கி - வாடகை | 240,000 | 240,000 |
| மருத்துவமனை வங்கி - மின்சாரம் | 393,146 | 334,750 |
| சணச - வாடகை | 12,000 | 12,000 |
| இலங்கை வங்கி - மின்சாரம் | 216,413 | 287,583 |
| பல்வேறுபட்ட வருமானங்கள் | 6,271,665 | 4,936,696 |
| பதவியணியினரினால் செலுத்தப்பட்ட முறிகள் | 1,657,830 | 1,307,012 |
| விற்பனை தரகுப் பணம் | | 293,918 |
| நிபுணத்துவ மருத்துவர் ஆலோசனை சேவை | 537,480 | 1,261,635 |
| பாதுகாப்பு சேவை - மின்சாரம் | 50,742 | 46,724 |
| பால் விற்பனை நிலையம் - மின்சாரம் | 134,415 | 94,943 |
| பால் விற்பனை நிலையம் - வாடகை | 60,000 | 60,000 |
| ஒசுசல - வாடகை | 1,020,000 | 1,020,000 |
| ஒசுசல - மின்சாரம் | 57,520 | |
| மக்கள் வங்கி - மின்சாரம் | 59,116 | 38,745 |
| சேவைக் கட்டணம் 0.1% | 225,853 | 241,455 |
| வாகன தரிப்பிடத்தின் மூலம் கிடைத்த வருமானம் | 8,681,765 | 6,939,600 |
| பழச்சாறு விற்பனை நிலையம் - மின்சாரம் | 10,912 | |
| மோட்டார் வாகன விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் | 2,571,526 | |
| Chiller இயந்திர விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் | - | 80,000 |
| | 32,250,519 | 24,032,458 |

| | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 08 : பொருட்கொள்வனவு** | | |
| மருந்து வகைகள் | 165,706,422 | 145,933,419 |
| அறுவை சிகிச்சை பொருட்கள் | 137,649,110 | 113,811,713 |
| கட்டுத்துணிப் பொருட்கள் | 30,556,739 | 29,953,779 |
| நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஒட்சிசன் | 24,369,539 | 16,751,482 |
| இரசாயனகூட இரசாயன மற்றும் பயன்பாட்டுப் பொருட்கள் | 92,324,583 | 84,752,413 |
| ஊடுகதிர் படச்சுருள், இரசாயன பொருட்கள் | 17,286,627 | 15,676,968 |
| பொது விநியோகங்கள் | 49,181,868 | 34,852,531 |
| மின்னனு மருத்துவ பொறியியல் பயன்பாட்டுப் பொருட்கள் | 8,817,824 | 5,112,393 |
| | 525,892,712 | 446,844,698 |
| கூட்டுக : கையிருப்பு முற்கொணர்தல் | 138,525,061 | 130,445,990 |
| கழிக்குக : கையிருப்புகளை மறுபக்கம் கொண்டு செல்லல் | 154,431,047 | 138,525,061 |
| | 509,986,726 | 438,765,627 |
| கூட்டுக : பயன்படுத்தமுடியாத, காலவதியாகிய கையிருப்புகள் (ஏற்பாடு) | 768,709 | 1,351,858 |
| கழிக்குக: நோயாளிகளினதும் ஊழியர்களினதும் உணவுப் பொருட்களுக்கான செலவுகள் | 89,603,912 | 76,576,796 |
| | 600,359,347 | 516,694,281 |
| * *மேலதிக ஒதுக்கீடுகளுக்கான சீராக்கல்கள் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளன* | | |
| | | |
| **குறிப்பு 09 : சம்பளங்களும் ஊதியங்களும்** | | |
| சம்பளங்களும் படிகளும் | 721,343,045 | 639,147,429 |
| ஊழியர்களுக்கான EPF, ETF | 92,015,611 | 88,884,506 |
| மேலதிக, துண்டுவீத மற்றும் பதிற்கடமை கொடுப்பனவு | 163,273,464 | 135,346,871 |
| சீருடைக் கொடுப்பனவு | 10,083,635 | 5,420,458 |
| எடுக்கப்படாத லீவுக்கான கொடுப்பனவு | 5,000,000 | 5,000,000 |
| ஓய்வூதியக் கொடுப்பனவு | 4,749,632 | 3,857,860 |
| பிரயாண செலவுகள் | 625,992 | 567,222 |
| | 997,091,379 | 878,224,346 |
| **கூட்டுக : ஊழியர்களுக்காக செலவாகும் பிற செலவுகள்** | | |
| இலவச மருத்துவ சிகிச்சை செலவுகள் | 34,534,505 | 30,271,123 |
| ஊழியர் நலனோம்பல் | 132,850 | 394,965 |
| மனிவள அபிவிருத்தி செலவுகள் | 129,552 | 243,120 |
| பணிக்கொடை ஒதுக்கீடுகள் | 33,603,908 | 37,425,242 |
| | 1,065,492,193 | 946,558,796 |
| **குறிப்பு 10 : பெறுமானத்தேய்வும் தவணைமுறை கடன் கரைப்பும்** | | |
| ஆண்டினுள் பெறுமானத்தேய்வுகளுக்கான ஒதுக்கீடு | 110,397,396 | 117,880,041 |
| கழிக்குக : தவணைமுறை கடன் கரைப்பு | 110,397,396 | 140,202,500 |
| | - | - 22,322,459 |

| | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 11 : பிற இயங்கு செலவுகள்** | | |
| (அ) எரிபொருள் | | |
| மின்பிறப்பாக்கி | 1,456,900 | 910,163 |
| எரிதொட்டி | - | |
| கொதிகலம் | 14,683,000 | 7,324,100 |
| மோட்டார் வாகனங்கள் | 3,918,457 | 3,314,277 |
| | 20,058,357 | 11,548,540 |
| (ஆ) பயன்பாட்டுச் சேவைகள் | | |
| மின்சார கட்டணம் | 124,909,230 | 101,413,052 |
| நீர் கட்டணம் | 32,371,668 | 25,029,363 |
| தொலைபேசி கட்டணம் (தொடர்பாடல்) | 2,274,234 | 2,754,178 |
| | 159,555,132 | 129,196,593 |
| (இ) திருத்த வேலைகளும் பராமரிப்பும் | | |
| வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட சேவை உடன்படிக்கைகள் | 16,734,986 | 19,387,743 |
| மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகள் | 2,399,925 | 2,126,190 |
| மருத்துவ உபகரணங்களின் / பிற உபகரணங்களின் திருத்த வேலைகள் | 18,980,717 | 34,419,223 |
| உருக்கு தளபாடங்களின் திருத்த வேலைகள் | 2,230,656 | |
| கட்டடங்களின் திருத்த வேலைகள் | 16,445,107 | 4,273,672 |
| | 56,791,392 | 60,206,828 |
| (ஈ) பிற சேவைகள் | | |
| துப்பரவேற்பாட்டுச் சேவை | 21,871,591 | 22,773,365 |
| கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தல் சேவை | 1,893,885 | 1,447,798 |
| உரிமை கோரப்படாத சடலங்களை அகற்றுதல் | 444,850 | 400,250 |
| கழிவுவழிந்தோடும் கால்வாய்களைப் பராமரித்தல் | 11,220,131 | 9,849,021 |
| துணி சலவை சேவை | 6,703,210 | 6,229,776 |
| பாதுகாப்பு சேவை | 14,110,898 | 15,060,531 |
| இறைவரி அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி | 571,398 | 615,360 |
| சட்டக் கட்டணம் | 515,846 | 829,298 |
| கணக்காய்வுக் கட்டணம் | 650,000 | 550,000 |
| ஒழுக்காற்று நடவடிக்கைக் கட்டணம் | - | - |
| அஞ்சல் மற்றும் முத்திரைக் கட்டணம் | 795,755 | 643,081 |
| உபசரிப்புச் செலவு | 2,845 | 665 |
| பணிப்பாளர்சபை / கேள்விச் சபை உறுப்பினர்களுக்கான படிகள் | 463,000 | 259,750 |
| பதிவளிப்பு செய்யப்பட்ட மருத்துவமனைக் கட்டணம் (மதகுருமார் / பிற) | 3,242,403 | 5,298,042 |
| பத்திரிகை விளம்பரங்கள் | 2,045,959 | 2,219,408 |
| நூல்களும் சஞ்சிகைகளும் | 1,182,441 | 896,878 |
| நானாவித செலவுகள் | 1,219,779 | 965,102 |
| வீதவரிகளும் வரிகளும் | 876,720 | 836,220 |
| | 67,810,712 | 68,874,545 |
| | 304,215,593 | 269,826,506 |

| | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 12 : நிதிச் செலவுகள்** | | |
| வங்கி கட்டணம் | 215,718 | 413,200 |
| கடன் அட்டைகளுக்கான தரகுக் கட்டணம் | 2,540,794 | 1,794,259 |
| | 2,756,512 | 2,207,459 |
| **குறிப்பு 13 : பிற செலவுகள்** | | |
| அறவிடமுடியாத கடன்களை பதிவழிப்புச் செய்தல் | - | - |
| ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடு | - | - |
| நிலையான சொத்துக்களின் விற்பனை (நட்டம்) | - | - |
| முன்னைய கொடுப்பனவுகளுக்கான பதிவழிப்பு | - | - |
| இடர்கடன் பதிவழிப்பு | - | - |
| **குறிப்பு 14 : மருத்துவமனை நிதியத்தின் குறித்தொதுக்கப்படாத நிலுவை** | | |
| வரவு செலவு கணக்கிற்கமைய இலாபம் / (நட்டம்) | (119,173,526) | (27,895,776) |
| சனவரி 1 ஆம் திகதியன்றுக்கான இலாபம் / (நட்டம்) | (847,707,655) | (825,455,067) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | 1,220,492 | 5,643,188 |
| திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான இலாபம் / (நட்டம்) | (846,487,163) | (819,811,879) |
| வருட இறுதியில் இலாபம் / (நட்டம்) | (965,660,688) | (847,707,655) |

# 4.5 பத்து வருடகால பொழிப்பு

| | 2003 000' | 2004 000' | 2005 000' | 2006 000' | 2007 000' | 2008 000' | 2009 000' | 2010 000' | 2011 000' | 2012 000' |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மருத்துவமனை கட்டணம் | 366,516 | 395,886 | 411,959 | 480,290 | 524,314 | 588,214 | 721,761 | 812,121 | 828,236 | 993,119 |
| வளர்ச்சி விகிதாசாரம்(%) | 12.27 | 8.01 | 4.06 | 16.59 | 9.17 | 12.19 | 22.70 | 12.57 | 1.98 | 19.91 |
| அரசாங்கத்தின் மீண்டுவரும் கொடை | 266,000 | 350,000 | 510,000 | 588,000 | 672,277 | 736,400 | 775,000 | 775,000 | 837,000 | 827,234 |
| வளர்ச்சி விகிதாசாரம் (%) | (13.55) | 31.58 | 45.71 | 15.29 | 14.33 | 9.54 | 5.24 | - | 8.00 | (1.17) |
| வட்டி வருமானம் | 7,960 | 6,916 | 5,399 | 4,886 | 4,995 | 4,933 | 4,823 | 3,334 | 4,443 | 5,376 |
| வளர்ச்சி விகிதாசாரம்(%) | (43.28) | (13.12) | (21.93) | (9.50) | 2.23 | (1.24) | (2.23) | (30.87) | 33.26 | 21.00 |
| பிற வருமானம் | 8,470 | 9,465 | 12,116 | 15,483 | 14,742 | 17,339 | 27,099 | 32,909 | 24,032 | 32,250 |
| வளர்ச்சி விகிதாசாரம்(%) | (19.97) | 11.75 | 28.01 | 27.79 | (4.79) | 17.62 | 56.29 | 21.44 | (26.97) | 34.20 |
| மொத்த வருமானம் | 648,946 | 762,267 | 939,474 | 1,088,659 | 1,216,328 | 1,346,886 | 1,528,683 | 1,623,364 | 1,693,711 | 1,857,979 |
| வளர்ச்சி விகிதாசாரம்(%) | (1.49) | 17.46 | 23.25 | 15.88 | 11.73 | 10.73 | 13.50 | 6.19 | 4.33 | 9.70 |
| மொத்த செலவு | 857,524 | 935,184 | 1,129,901 | 1,167,885 | 1,294,536 | 1,438,597 | 1,555,528 | 1,571,299 | 1,712,964 | 1,977,155 |
| வளர்ச்சி விகிதாசாரம்(%) | 1.24 | 9.06 | 20.82 | 3.36 | 10.84 | 11.13 | 8.13 | 1.01 | 9.02 | 15.42 |
| சேமிப்பு / நட்டம் | (208,578) | (172,917) | (190,427) | (79,226) | (78,208) | (91,711) | (26,845) | 52,065 | (19,253) | (119,176) |
| வளர்ச்சி விகிதாசாரம்(%) | 10.80 | (17.10) | 10.13 | (58.40) | (1.28) | 17.27 | (70.73) | (293.95) | (136.98) | 519.00 |
| அரசாங்கத்தின் மூலதன கொடை | 98,614 | 145,863 | 46,141 | 105,000 | 130,591 | 106,100 | 102,925 | 115,000 | 236,785 | 71,000 |
| வளர்ச்சி விகிதாசாரம்(%) | (16.59) | 47.91 | (68.37) | 127.56 | 24.37 | (18.75) | (2.99) | 11.73 | 105.90 | (70.01) |
| மொத்த வருமானத்துக்கு மேலதிகமாக மீண்டுவரும் கொடை % | 41 | 46 | 54 | 54 | 55 | 55 | 51 | 48 | 49 | 45 |
| பயன்படுத்தப்பட்ட படுக்கைகளின் விகிதாசாரம் (%) | 59 | 63 | 74 | 72 | 70 | 73 | 75 | 66 | 66 | 70 |

# 4.6 முக்கிய கணக்கிடல் கொள்ளை - 2012

## 1. பொது

### 1.1 தயாரிக்கப்பட்ட அடிப்படை

1. இலங்கை கணக்கிடல் தரங்களுக்கு அமைவாக , ஐந்தொகை வருமானக்கூற்று, உரிமை பெறுமதிகளின் மாற்றம், கணக்கிடல் கொள்கை, சபைக் குறிப்புகள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளது.
2. சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய வரலாற்று செலவுத் தரங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.
3. சபையின் நிதிக்கூற்றுகள் இலங்கை நாணயமான ரூபாவில் காட்டப்பட்டுள்ளது.

### 1.2 அரசாங்கத்தின் கொடை

சபைக்கு பின்வரும் அரசாங்கக் கொடைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மூலதனக் கொடை - பொது திறைசேரி

மீண்டுவரும் கொடை - பொது திறைசேரி

1. நியதிச்சட்ட சபையொன்றுக்கு அரசாங்கத்தின் மூலதனம் கிடைக்கப்பட்ட விடத்து இலங்கைக் கணக்கிடல் தரங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் கொடை நிதி ஏற்பாடுகளுக்கான இலங்கை கணக்கிடல் தரம் 24 பந்தி 26 சபையினால் இணங்கியொழுகப்பட்டுள்ளது.
2. இதற்கமைவாக வருமானக் கணக்கொன்றுக்கு மூலதனக்கொடைகள் வைப்பிலிடப்பட்டு, பெறுமானத்தேய்வு சராசரிக்கமைவாக தவணை முறைக் கடன் கரைப்புச் செய்யப்படுகின்றது. தவணை முறைக் கடன் கரைப்பு வீதாசாரம் சொத்துக்களுக்கான முதலீட்டின் மீது கணக்கிடப்பட்ட நிறையளிக்கப்பட்ட சராசரி பொது பெறுமானத்தேய்வு சராசரிக்கு அண்ணளவாக சமமானதாகும்.
3. பொது திறைசேரியிலிருந்து கிடைக்கும் மீண்டுவரும் கொடைகள் குறித்த காலப் பகுதிக்குள் கிடைத்த வருமானமாகக் கணிப்பிடப்படுவதோடு, ஆண்டின் வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 1.3 வரிவிதிப்பு

வருமான வரிகளுக்கான ஒதுக்கீடுகள் நிதியறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பிலான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆயினும், முன்கொணரப்பட்ட வரிக்குறைப்புகளுக்கு கணக்குகளில் நிதி ஏற்பாடுகள் ஏற்பாடு செய்யப்படவில்லை.

வட்டி வருமானம் மீது இறைவரிக் கணக்குகளில் காட்டப்படவில்லை. ஆதலால், பொருளாதார சேவை அறவீடுகளிலிருந்து இறைவரியைக் கழிக்கலாம்.

### 1.4 ஒப்பீட்டு தகவல்கள்

கணக்கிடல் கொள்கை சபையினால் ஒத்தியலும் விதத்தில் ஏற்புடைத்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதோடு, கடந்த ஆண்டின் கணக்குகளுக்கும் இது ஏற்புடைத்தாக்கப்பட்டுள்ளது.

சகல சீராக்கல்களும் இலங்கை கணக்கிடல் தரம் 10 இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட மருத்துவமனை பற்றுச் சீட்டுக்கள் யாவும் மருத்துவமனையின் வருமானமாகக் கருதி வருமான அறிக்கையில் செலவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **சொத்துக்கள் மற்றும் அவற்றை மதிப்பிடும் அடிப்படை**

2.1 சொத்துக்கள், இயந்திர சாதனங்கள், பெறமானத்தேய்வு, மீள் மதிப்பிடல்

1. சொத்துக்கள் மற்றும் இயந்திர சாதனங்களின் பெறுமதி அவை கொள்வனவு செய்யப்பட்ட விலையிலிருந்து அல்லது அவற்றின் மதிப்பீட்டு விலையிலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வுப் பெறுமதி குறைக்கப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளது.

சொத்துக்கள், இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பெறுமதியாவது, அவற்றின் எதிர்பார்க்கும் பயன்பாட்டுக்கு உகந்ததாக செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதற்கான இடைநேர்விளைவான செலவுகளும் அடங்கலாக இந்த சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி அல்லது சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி ஆகும்.

வழங்கப்படும் சேவையைப் பேணுவதற்கு அல்லது அவற்றின் ஆற்றலை அதிகரிப்பதற்கு நிலையான சொத்துக்களை கொள்ளல் செய்தல், விரிவுபடுத்தல், மேம்படுத்தல் ஆகியவற்றுக்கு உறப்படும் செலவுகள் மூலதனச் செலவுகளாகக் கருதப்பட்டுள்ளன.

2. வெற்றுக் காணிகள் தவிர ஏனைய சொத்துக்களின் பெறுமானத் தேய்வு இலகு வழிமுறைகளைப் பயன்படுத்தி பின்வரும் வீதாசாரம் குறித்தொதுக்கப் பட்டுள்ளது.

**யப்பான் அரசாங்கத்தின் நன்கொடை**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 0.2% |
| மின்தொழினுட்ப வேலைகள் | 10% |
| கழிவுநீர் கால்வாய், குழாய்நீர் முறைமை | 10% |
| குளிரூட்டல் | 15% |
| மின் உயர்த்தி | 10% |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 13% |
| மருத்துவ உபகரணங்கள் | 20% |

**பிற சொத்துக்கள்**

| | |
|---|---|
| ஏனைய கட்டடங்கள் | 05% |
| தளபாடங்கள், பொருத்துகைகள், காஸ் அடுப்பு, பிற உபகரணங்கள் | 20% |
| மின் உபகரணங்கள், தையல் இயந்திரங்கள், சிலிண்டர் | 10% |
| மருத்துவ உபகரணங்களும் கருவிகளும் | 25% |
| குளிர்சாதனப்பெட்டி, பிரதி எடுத்தல் இயந்திரம் | 15% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| மென்பொருட்டகள் (உள்ளூரில் தயாரிக்கப்பட்டவை) | 100% |

3. கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் குறித்தொதுக்கப்படாததோடு, நீக்கப்படும் ஆண்டில் முழுமையான பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

4. நிதி ஓட்டக்கூற்று சமர்ப்பிக்கப்படுவதற்கும் பணம் மற்றும் பணம் சார்ந்தவை என்பதன் கீழ் கையிலுள்ள தொகையும் வங்கி மேலதிகப் பற்று நிலுவையும் சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ஓட்டக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மறைமுகமான முறையொன்றை அடிப்படையாகக் கொண்டாகும்.

3. **பொறுப்புக்களும் ஒதுக்கீடுகளும்**

3.1 மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாரா நிகழ்வுகளும்

ஐந்தொகை திகதியன்றுக்கான சகல பௌதிக மூலதனச் செலவுகள் சார்பில் வெளிப்படுத்தப்பட்ட பொறுப்புக் கணக்குகளுக்குரிய குறிப்புகள் காட்டப்பட்டுள்ளன.

3.2 ஓய்வூதிய நலன்களுக்கான செலவு

ஒய்வுபெறும் திகதியன்றிலிருந்து 5 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் பணிக்கொடை ஒதுக்கப்பட்டுள்ளது.

2012 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கு பணிக்கொடைப் பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு 33,603,908.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

3.3 காலவதியான மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள், அறவிடப்படமுடியாக் கடன் ஆகியவற்றுக்கான நிதி ஏற்பாடுகள்

(அ) ஆண்டினுள் காலவதியான மருந்துகளின் உண்மையான பெறுமதி காலவதியாகும் பொருட்களுக்கான ஒதுக்குகையாகக் கணக்கிடப்பட்டு அதன் வித்தியாசம் வருமான மற்றும் செலவுக்கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது.

3.4 இருப்புப் பதிவு மதிப்பீடு

இருப்புப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் தேறிய பெறுமதி சந்தை விலைக்கு சமமானதாகக் கருதி அந்த விலையினைவிட குறைந்த விலையான சாதாரண செலவில் இந்தப் பொருட்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

4. **வருமான, செலவுக் கணக்கு**

4.1 வருமானம்

1. சபையின் வருமானம் மருத்துவமனை கட்டணமாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்தும் அரசாங்கத்தின் மீண்டுவரும் கொடைகளிலிருந்தும், அழைப்பு வைப்புகளிலிருந்தும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்களிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானங்களிலிருந்தும் ஏனைய நானாவித வருமானங்களிலிருந்தும் பெறப்படுகின்றது.
2. சகல வருமானங்களும் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

4.2 செலவுகள்

1. நோயாளிகள் கவனிப்புச் சேவையை வழங்குவதற்காக ஏற்ற அத்துடன் மூலதன சொத்துக்களை வினைதிறமையுடன் நடாத்திச் செல்வதற்கு ஏற்ற அத்தகைய எல்லா செலவுகளும் ஆண்டின் மிகை வருமானம் அல்லது பற்றாக்குறை சேர்செலவுகளாக வருமானத்திற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.
2. வருமான அறிக்கையை சமர்ப்பிக்கும் தேவைக்காக சபை செயலாற்றுகையை எடுத்துக்காட்டுவதற்கு செலவுகளின் தன்மையைக்காட்டும் முறைகள் போதுமானதென்பது சபையின் கருத்தாகையினால் இத்தகைய முன்வைப்பு முறையொன்று பின்பற்றப்பட்டுள்ளது.
3. தொழில்சார் கட்டணமாக ஆண்டில் சேர்ந்த 160 மில்லியன் ரூபா சபையினால் ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட தொகையொன்றாக இல்லாததனால் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. இந்த தொழில்சார் கட்டணம் சபையின் ஊழியர்களினால் அவர்களுடைய வழமையான கடமை நேரங்களுக்குப் பின்னரும் விடுமுறைநாட்களிலும் தனிப்பட்ட ரீதியில் வழங்கிய சேவைகளுக்காக ஈட்டப்பட்ட தொழில்சார் கட்டணமாக அமைந்தமை இதற்குக் காரணமாகும்.

# 4.7 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. எச்எம்/பீ/எஸ்ஜேஜீஎச்/எப்ஏ/2012

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2013 நவம்பர் 25

தலைவர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1983 இன் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை 2013 யூலை 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில்கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியம இல. 01 இல் விபரிக்கப்பட்டுள்ள படிவங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிக்கொடைச் செலவினம் மற்றும் பணிக்கொடை ஏற்பாட்டுக் கணக்கு வைத்தல் தொடர்பிலான குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 5 வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருந்த 22 ஊழியர்களின் மொத்த பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகையான ரூபா 9,307,075 இலிருந்து ரூபா 1,861,415 இனை மீளாய்வாண்டின் செலவினமாக இனங்காணாது மொத்த ஏற்பாட்டினையும் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்திருந்தமையால் ரூபா 7,445,660 ஆல் ஆண்டின் பற்றாக்குறை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டில் ஒரு உத்தியோகத்தருக்கான ரூபா 107,520 பணிக்கொடையினை இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையை திருத்துவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் தற்காலிக பதவிநீக்கம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களை பணிக்கொடை ஏற்பாட்டில் உள்ளடக்கியிருக்காமை காரணமாக ஆண்டின் பணிக்கொடை ஏற்பாடு ரூபா 746,355 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 110,397,396 ஆகக் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆண்டிற்குரிய காலக்கழிவுப் பெறுமதியினை தனியாக கணிப்பிடுவதற்குப் பதிலாக பெறுமானத்தேய்வினை காலக்கழிவாகக் காண்பித்து அச்செலவினத்தை பெறுவனவுகளிற்கு எதிரீடு செய்து தேறிய ஏற்பாடு பூச்சியம் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. காலக்கழிவினை சரியாக கணிப்பீடு செய்திருக்காமையால் 2009 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்திருந்த இரண்டு எம்பியூலன்ஸ் வாகனங்களிற்கான ரூபா 1,157,000 பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டில் காலக்கழிவாக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,883,541 செலவுக் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்ததுடன் அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 65,095 தொகையான அட்டுறுச் செலவினமும் ரூபா 2,818,446 தொகையான கடன்கொடுத்தோரும் ரூபா 2,883,541 தொகையான ஆண்டிற்குரிய பற்றாக்குறையும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்காக நோயாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 719,127 வருமானம் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(உ) 2010 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 2,800,000 பெறுமதியான இயந்திரம் 2012 ஆம் ஆண்டின் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வுச் செலவினமும் பற்றாக்குறையும் ரூபா 700,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வினை கணக்கீடு செய்திருக்காமையால் முன்னைய ஆண்டின் பற்றாக்குறையும் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ஆண்டில் இரத்துச்செய்யப்பட்டிருந்த காசோலைகளின் பெறுமதியினை தொடர்புடைய கடன்பட்டோர் கணக்குகளிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக செலவினக் கணக்கில் ரூபா 902,513 தொகையாலும் சொத்துக்கள் கணக்கில் ரூபா 70,200 தொகையாலும் செலவு வைக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் ரூபா 902,513 ஆல் ஆண்டிற்குரிய பற்றாக்குறையும் ரூபா 70,200 ஆல் சொத்துக்களும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) பதவியணியினருக்காகவும் அவர்களில் தங்கியிருப்போருக்காவும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இலவச மருத்துவ சிகிச்சை வழங்கல் திட்டத்தின் படி, ரூபா 100 பதிவுக் கட்டணம், மருத்துவ சிகிச்சைக் கட்டணம், ஆய்வுகூடப் பரிசோதனைகள் மற்றும் கதிர்வீச்சுப் பரிசோதனை கட்டணங்களை சபையின் வருமானமாகக் கணக்கீடு செய்யவேண்டும் என்பதுடன் அச்செலவினம் பதவியணியினருக்காக சபையினால் செலவிடப்பட்ட தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதலும் வேண்டும். இருப்பினும், பதிவுக் கட்டணமான ரூபா 100 தொகையினை வருமானங்கள் மற்றும் செலவினங்களைக் கணிப்பிடுகையில் கருத்திற்கொள்ளப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 3,521,000 வருமானங்களும் செலவினங்களும் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வைகளில் வெளிப்பட்ட பதவியணியினர் மற்றும் அவர்களில் தங்கியிருப்போருக்கான ஆய்வுகூடப் பரிசோதனைக் கட்டணமான ரூபா 261,735 செலவினமும் அவ்வாறு நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஏ) தனியார் வியாபாரிகளால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 306,514 விற்பனைத் தரகுகள் (Sales Commission) நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஐ) முன்னைய சில ஆண்டுகளாக அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடாக ரூபா 1,327,716 தொகை தொடர்ந்து முன்னெடுத்து வரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் உள்ளபடியான அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாட்டைக் கணித்து நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) எதிர்வரும் ஆண்டிற்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 273,163 தொகையான வாகனக் காப்புறுதி தவணைக் கட்டணத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருந்தமையால் ஆண்டின் பற்றாக்குறை அதனையொத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டில் சாதாரண சிகிச்சைக் கூடங்களில் (Non paying wards) வைத்தியசாலை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதியினைக் காட்டிலும் ரூபா 31,446,194 தொகையால் பெறப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மேலதிகமாக கிடைத்த தொகையினை இனங்காணப்படாது 28 வருமான விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, சபையின் வருமானங்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) உயர் நரம்பியல் நிலையக் கட்டிடத்தின் கிரயமான ரூபா 250,868,581 தொகை 2008 ஆம் ஆண்டு முதல் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அக்கட்டிடம் வருடத்திற்கு 5 சதவீதப்படி பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும், வருடத்திற்கு 2 சதவீதம் என்ற அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தமையால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,526,057 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஃ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 403,916 மேலதிக நேரச் செலவினத்தை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டின் பற்றாக்குறை அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 4,265,139 தொகை கட்டிட திருத்தங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டின் வாகன வாடகை வருமானக் கணக்கிற்கு ரூபா 228,681 செலவினம் வரவு வைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,641,289 தொகையான வாகன வாடகை வருமானம் ரூபா 1,412,608 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(கி) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 64,508,607 தொகையான நடைபெற்றுவரும் வேலைகளின் பெறுமதியை ஐந்தொகையில் நடைபெற்றுவரும் வேலைகளின் கீழ் காண்பிக்காது தொடர்ந்தும் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(கீ) 2011 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்த (Central Air Condition System) காற்றுச்சீராக்கி இயந்திரத்தின் கிரயத்தை குறித்த சொத்துக் கணக்கிலிருந்தும் அச்சொத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுமானத்தேய்வை, திரட்டிய பெறுமானத்தேய்வேற்பாட்டுக் கணக்கிலிருந்தும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் நபர்களிடமிருந்தும் வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த பதிவேட்டுப் பொருட்களை கணக்கீடு செய்வதற்கு 2012 ஆம் ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் கணக்கிணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு விடயம் | நிதிக்கூற்றுக்களின் படி மீதி | சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிவேடுகள்/பட்டோலைகள் /உறுதிப்படுத்திய அறிக்கைகள் / பொருள்மெய்மையாய்வு பொழிப்பு அறிக்கையின் படி மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) i. சாதாரண பொருள் உப களஞ்சியம் | 4,337,771 | 5,422,378 | (1,084,607) |
| ii. மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைப் பொருள் உப களஞ்சியம் | 47,215,298 | 46,107,599 | 1,107,699 |
| (ஆ) i. அறவிடவேண்டிய வைத்தியசாலைக் கட்டணம் (பட்டோலை) | 85,783,498 | 84,004,034 | 1,779,464 |
| ii. –மேற்படி- (பட்டோலை) | 85,783,498 | 83,683,968 | 2,099,530 |
| (இ) காலங்கடந்த இருப்பு | 2,836,159 | 2,649,955 | 186,204 |
| (ஈ) செனல் வருமானம் | 537,480 | 1,600,450 | (1,062,970) |
| (உ) ஊழியர் கடன் | 97,184,211 | 97,201,237 | (17,026) |
| (ஊ) எம்பியூலன்ஸ் வருமானம் | 1,412,608 | 1,962,681 | (550,073) |

## 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### (அ) பெறவேண்டிய கணக்குகள்

கடன்பட்டோரின் கீழான பெறவேண்டிய வருமானங்களாகவுள்ள இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட பத்து ஆண்டுகளிற்கு குறைந்த காலப்பகுதிக்குரிய

ரூபா 144,199 இனையும் பத்து ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 130,332 இனையும், அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணத்தில் உள்ளடங்கியுள்ள இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ஐந்து ஆண்டுகளிற்கு குறைந்த காலப்பகுதிக்குரிய ரூபா 6,599,710 இனையும் ஐந்து ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 653,082 இனையும் கழிவகற்றல் கட்டணங்களாக மூன்று ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 5,907,011 இனையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் முடியாது போயிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

---

கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவுகளில் உள்ளடங்கியுள்ள இரண்டு ஆண்டுகளிற்கும் ஐந்து ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 85,301,423 மீதியும் ஐந்து ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலத்திற்குரிய ரூபா 222,045,271 மீதியும் மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) பின்வரும் கணக்கு விடயங்களின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசன சபைக்கு செலுத்தவேண்டிய தொகை | 21,245,734 | மீதி உறுதிப்படுத்தல் |
| (ii) | வியாபாரக் கடன்கொடுத்தோர் | 261,563,454 | ரூபா 197,345,807 மீதிக்கான உறுதிப்படுத்தல்<br>ரூபா 10,446,000 இற்கான பட்டோலை |
| (iii) | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு செலுத்தவேண்டிய தொகை | 331,491,318 | ரூபா 120,158,286 மீதிக்கான உறுதிப்படுத்தல் |

(ஆ) வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்ற பின்னர் வெளியேறிச் செல்கையில் சிட்டைகளின் பெறுமதியினைக் காட்டிலும் கூடிய தொகையினை செலுத்தியிருக்கும் சந்தர்ப்பங்களில் அத்தொகையினை மீளளிக்கையில் பற்றுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்காது ரூபா 153,534 தொகையினைப் பெற்றுக்கொண்டிருந்த 4 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பிரிவு | 2011 திசெம்பர் முதல் 6 மாத காலத்திற்காக பிரதான கணக்காளர் பதவியில் பதில்கடமையாற்றிய உதவிக் கணக்காளருக்கு ரூபா 74,430 பதிற்கடமை படியாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1998 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய 2-80/98 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை | வைத்தியசாலையின் உதவிக் கணக்காளருக்கு 2012 ஜனவரி முதல் ஆகஸ்ட் (ஏப்ரல் தவிர) வரை சுற்றிக்கையினை மீறி 20 நாட்களிற்காக ரூபா 64,300 விடுமுறை நாள் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க மற்றும் 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | வைத்தியசாலை கணக்காளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் போன்ற பதவிகளிற்காக உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்கவதற்கு பதிலாக ரூபா 30,000 வீதம் மாதாந்த பிரயாணப் படியினை செலுத்துவதற்கு உரித்தற்றுக் காணப்படுகையில் அப்பதவிகளில் பதிற்கடமையாற்றும் கணக்காளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கு 2012 ஆம் |

| | | |
|---|---|---|
| | | ஆண்டில் முறையே ரூபா 270,000 மற்றும் ரூபா 240,000 என்ற வகையில் பிரயாணப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2009 யூலை 08 ஆந் திகதிய பீஈடீ/பீயூ ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறையினைத் தயாரித்து தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழுவிற்கு 2009 யூலை 30 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நிதிப்பிரமாணம் 387 | அரசாங்க வங்கிக் கணக்கிலிருந்து மேலதிகப் பற்றினை எடுத்தல் தடுக்கப்பட்டுள்ள போதிலும், 2012 திசெம்பர் 18 ஆந் திகதி வரை காசுப் புத்தகத்தின் படி நடைமுறைக் கணக்கில் ரூபா 50,971,571 மேலதிகப்பற்று காணப்படுகையில் காசோலைகள் மூலம் தொடர்ந்தும் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தமை காரணமாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,706,267 மேலதிகப்பற்று காணப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளில் ரூபா 119,173,526 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 27,895,777 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 91,277,749 பின்னடைவிற்கு மொத்தப் பொருள் நுகர்வுச் செலவினம் ரூபா 83,665,066 இனாலும் பதவியணிக் கிரயம் ரூபா 118,933,397 இனாலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 34,389,087 இனாலும் அதிகரித்திருந்தமையே பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3.2 சபைக்கு எதிராகவும் சபையினாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஓய்வுபெறும் வயதுக்கு முன்னர் ஓய்வுபெறச் செய்தல், சம்பளங்களைத் திருத்திக் கொள்ளல், உரிய காலத்தில் பதவியுயர்வு வழங்கப்படாமை, நியமனத்தில் உயர் தரத்தினைப் பெற்றுக்கொள்ளல், மீண்டும் நியமனத்தைப் பெறுதல் மற்றும் நோய்களிற்கான சிகிச்சையளித்தல் குறைபாடுகள் போன்றவை காரணமாக வைத்தியசாலைக்கு எதிராக 14 உள்ளக மற்றும் வெளி நபர்களால் நீதிமன்றங்களில் 14 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) ஒரு நபரிடமிருந்து வைத்தியசாலைக் கட்டணம் ரூபா 179,000 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக வைத்தியசாலையால் அத்தரப்பிற்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

திரவத்தன்மை விகிதங்கள் வீழ்ச்சிப் பெறுமதிகளைக் கொண்டிருப்பதுடன் சபையின் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு போதியளவு தொழிற்படு மூலதனமின்மை நிலை தொடர்ந்தும் காணப்பட்டது.

| திரவத்தன்மை விகிதங்கள் | ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதாசாரம் | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | 1:2.7 | 1:1.9 | 1:2.4 | 1:2.9 |
| விரைவு விகிதம் | 1:1 | 1:4.4 | 1:2.8 | 1:3.9 | 1:5 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சபையின் செயலாற்றலில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயலாற்றல் அளவுகோல் | 2012 | 2011 | குறைவு | 2011 உடன் ஒப்பிடுகையில் 2012 இன் சதவீதம் |
|---|---|---|---|---|
| (i) நரம்பியல் சத்திரசிகிச்சை | 1624 | 1966 | 342 | 18 |
| (ii) கண்சிகிச்சைப் பிரிவு OCT பரிசோதனை | 190 | 307 | 117 | 38 |
| Topographe பரிசோதனை | 50 | 59 | 09 | 15 |
| (iii) கதிர்வீச்சுப் பிரிவின் பரிசோதனைக்கான மொத்த நோயாளர் எண்ணிக்கை | 36176 | 40520 | 4344 | 11 |
| (iv) மொத்த எக்ஸ் கதிர் பரிசோதனை (Routine X-rays Examination) | 41895 | 46925 | 5080 | 11 |

(ஆ) வைத்தியசாலையின் ஆறு வார்ட்களில் கட்டில்களின் பயன்பாடு 50 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்காக எக்ஸ் கதிர் பிரிவினால் செயலாற்றல் தகவல்கள் பேணப்படாதிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் சிகிச்சைக்காக வருகை தந்திருந்த வெளிநோயாளர்களின் எண்ணிக்கை 61 சதவீதத்தால் குறைவடைந்தும் தங்கி சிகிச்சைபெறும் நோயாளர்கள் அடங்கலான சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 57 சதவீதத்தால் குறைவடைந்தும் காணப்பட்டமை அதவானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட Digital fluoroscopy with Angiography இயந்திரத்திற்கு 2008 ஆம் ஆண்டில் ரூபா 3,105,000 செலவில்

உதிரிப்பாகம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வியந்திரத்தை சேவை செய்வதற்காக 2011 யூன் 01 முதல் 2012 மே 31 ஆந் திகதி வரை ரூபா 1,938,854 செலுத்தி சேவை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதில் இரண்டு காலாண்டுகளுக்காக ரூபா 969,427 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2011 யூன் 01 முதல் 2012 மே 31 ஆந் திகதி வரை மேற்படி இயந்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட அறிக்கைகளிற்காக கிடைத்திருந்த வருமானம் ரூபா 562,950 ஆக காணப்பட்டது.

Angiogram பரிசோதனையினை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே 2008 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட இயந்திரத்திற்கு ரூபா 3,105,000 செலவில் உதிரிப்பாகம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2008 ஆம் ஆண்டு முதல் 2012 மே வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொண்டிருந்த பரிசோதனைகளின் எண்ணிக்கை 16 ஆக காணப்பட்டதுடன் அதன்படி பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த மொத்த வருமானம் ரூபா 2,400,000 மாத்திரமேயாகும்.

இதன்படி அந்த இயந்திரத்திற்காக வருடாந்தக் கட்டணமாக அதிக தொகை செலவிடப்படுவதனால் அதிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளை அதிகரிப்பதன் மூலம் வைத்தியசாலையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் உபாய வழிமுறை தொடர்பில் வைத்தியசாலை முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

அவ்வியந்திரத்திலிருந்து Angiogram பரிசோதனைக்கு மேலாக சாதாரண பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுவதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 நவம்பர் 02 ஆந் திகதி கதிர்வீச்சுத் திணைக்களத்தின் கதிர்வீச்சு நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தரால் வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அல்ட்ராசவுன்ட் ஸ்கேன் சேவையினை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவ்வாலோசனைகளில் குறிப்பிடப்பட்டிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலவச மருத்துவ சிகிச்சைக் கட்டணத்தின் உள்ளடக்கம் தொடர்பில் பகுப்பாய்வினை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் தகவல் முறைமையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தாதி மாணவியர்களிற்காக இலவச மருத்துவ சிகிச்சையளிக்கையில் மருத்துவத்திற்காக ரூபா 5,000 மற்றும் தங்கி சிகிச்சை பெறுவதற்காக ரூபா 20,000 என வருடாந்த எல்லைகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வெல்லையினை மீறி சிகிச்சைகள் பெற்றப்பட்டனவா என்ற பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடிய வகையில் கட்டுப்பாட்டு முறைமையொன்று வைத்தியசாலையில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இராணுவ நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான வங்கி மேலதிகப்பற்று வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு பிணைதாரராக சபையினால் ரூபா 10,000,000 ஏழு நாள் அழைப்பு வைப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ்வைப்பு 2009 இன் பின்னர் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதிலிருந்து ரூபா 5,201,232 வட்டி கிடைக்க வேண்டியுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், அம் முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருடாந்த வட்டியினை மீண்டும் முதலீடு செய்யக்கூடிய விதத்தில் வேறொரு முதலீட்டில் ஈடுபடுத்தி வட்டி வருமானத்தை அதிகரித்துக் கொள்ளலின் மீது சபையின் அவதானம் திரும்பியிருக்கவில்லை.

(ஊ) சுத்திகரிப்புச் சேவைக்காக வழங்குனர் ஒருவரை தெரிவுசெய்தலின் பலவீனங்கள்

---

2012 மே 06 ஆந் திகதி முதல் 3 மாத காலத்திற்காக ரூபா 1,619,351 மாதாந்தக் கட்டணத்திற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு சுத்திகரிப்புச் சேவை ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த 3 மாதங்களின் போதான செயலாற்றலின் அடிப்படையில் தொடர்ந்துவரும் 6 மாதங்களிற்காக ஒப்பந்தம் நீடிக்கப்படும் என இணங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சேவை வழங்குவதற்குத் தகைமையற்ற ஒப்பந்தகாரராக அமைச்சினால் இதற்கு முன்னர் பரிந்துரை செய்யப்பட்டிருக்கையில் அவ்விலை மனுதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) குறித்த 3 மாத கால முடிவில் செயலாற்றல் தொடர்பில் முறைப்பாடுகள் காணப்பட்டமை மற்றும் சுத்திகரிப்புச் சேவை குழுவால் சேவை திருப்தியளிக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருக்கையில் மீண்டும் சேவை வழங்குவதற்காக அவ்வொப்பந்தகாரருக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(iii) கேள்வி நிபந்தனைகளின் படி காணப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊழியர்கள் காணப்படாமை, வழங்கப்பட வேண்டிய பொருட்கள் உரியவாறு வழங்கப்பட்டிருக்காமை மற்றும் குறித்த சேவைகளை உரிய விதத்தில் நிறைவேற்றியிருக்காமையால் ஒவ்வொரு மாதமும் தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் வைத்தியசாலைக்கு மிக முக்கிய தேவையாகவுள்ள சுத்திகரிப்புச் சேவை நடவடிக்கைகள் பயனுள்ள வகையில் இடம்பெற்றிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சத்திரசிகிச்சை உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையில் விலைமனுக்கோரல் படிவத்தின் 6 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம், மொத்தக் கட்டளைகளின் பெறுமதியில் 10 சதவீத செயலாற்றல் பிணைமுறியொன்று சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செயலாற்றல் பிணைமுறியொன்றை சமர்ப்பிக்காதிருந்த ரூபா 25,475,950 பெறுமதியான எட்டு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) பட்டப்பின்படிப்பு உள்நாட்டு மருத்துவப் பயிற்சிக்காக சுகாதார அமைச்சிலிருந்து வைத்தியசாலைக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த மருத்துவர்களிற்காக படிகளைச் செலுத்துகையில் சில மருத்துவர்கள் பயிற்சியை முடித்திருந்த போதிலும், அவர்களது வங்கிக் கணக்குகளிற்கு படிகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. பத்து மருத்துவர்களிற்காக மீளாய்வாண்டில் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த மேலதிகப் படிகள் ரூபா 600,654 ஆக காணப்பட்டன.

(இ) எக்ஸ் கதிர்வீச்சு மருந்துப்பொருள் களஞ்சியப் பதிவேட்டின் படி 2012 யூலை 06 ஆந் திகதியில் Microbar HD cap for Ba-Meal ரக 115 போத்தல்கள் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 28,700 ஆ காணப்பட்டது. அதில் 40 போத்தல்கள் 2011 யூலை மாதத்தில் காலாவதியாகியிருந்ததுடன் எஞ்சிய 75 போத்தல்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி காலாவதிகாயிருந்தன. இருப்பினும், 2011 யூலை மாதத்தில் காலாவதியாகியிருந்த 40 போத்தல்களில் 15 போத்தல்கள் 2012 திசெம்பர் வரை விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன்படி காலாவதியான மருந்துகள் நோயாளிகளிற்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆம் ஆண்டில் ரூபா 2,800,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கொண்டம் எக்ஸ் கதிர் (Quantam X-ray) இயந்திரம் 2012 ஏப்ரல் முதல் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை செயலிழந்து காணப்பட்டதுடன் அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டில் ரூபா 3,995,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த “ஸ்ரடிக் எக்ஸ் கதிர்” (Static X-ray) இயந்திரம் 2012 ஆம் ஆண்டில் 3 சந்தர்ப்பங்களில் அதாவது 98 நாட்கள் செயலிழந்து காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு வரை Nephrology and Dialysis பிரிவில் செயலற்றுக் காணப்படும் Dialysis இயந்திரங்களின் எண்ணிக்கை 5 ஆகும். அதில் ஒரு இயந்திரம் 5 ஆண்டு காலமாகவும் மேலும் 3 இயந்திரங்கள் ஒரு வருடமாகவும் ஏனைய இயந்திரங்கள் 2 வருடங்களாகவும் செயலற்றுக் காணப்பட்டன. இருப்பினும், 2013 யூன் 28 ஆந் திகதி வரை அவ்வியந்திரங்கள் நி.பி. 756 இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வுச் சபையினால் பயன்படுத்த முடியாத பொருட்களாக பெயரிடப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1996 இல் கொள்வனவு செய்யப்பட்ட இகோ (Echo) இயந்திரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும், தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வைத்தியசாலையின் 4 களஞ்சியங்களில் காணப்பட்ட ரூபா 10,285,333 தொகையான இருப்புக்கள் மீளாய்வாண்டில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது வைத்திருக்கப்பட்டிருந்தன.

(உ) 3 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருந்த ரூபா 1,417,970 பெறுமதியான இருதய சத்திரசிகிச்சைக்குரிய சத்திரசிகிச்சைப் பொருள் இருப்புக்கள் களஞ்சியத்தில் காணப்பட்டன. இந்த இருப்பை கிரயத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பில் தனியார் வைத்தியசாலைகளில் விசாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தனியார் வைத்தியசாலைகளிலிருந்து 2013 மே 13 ஆந் திகதி வரை பதில்கள் கிடைத்திருக்கவில்லை. ரிஜ்வே

சிறுவர் வைத்தியசாலைக்கு ரூபா 565,170 பெறுமதியான இருப்பு நன்கொடை செய்யப்பட்டதாக தலைவரினால் பதிலளிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 2,836,159 பெறுமதியான காலம் கடந்த மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைப் பொருட்களை இனிமேலும் பயன்படுத்த முடியாத பொருட்களாக இனங்கண்டு, அந்த இருப்பினை கைதவிர்ப்புச் செய்வதற்கு 2013 யூலை 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 3,220,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 2 Dialysis இயந்திரங்கள் 2011 ஆம் ஆண்டில் செயலிழந்திருந்தன. இதன் போது Dialysis பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள மருத்துவ உத்தியோகத்தரால் இவ்விரண்டு இயந்திரங்களும் அவ்வப்போது செயலிழப்பதாகவும் அதனால் இவ்விரண்டு இயந்திரத்தினையும் திருத்தம் செய்வது பயனற்றதாகையால் கைதவிர்ப்புச் செய்வதே பொருத்தமானதாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இவ்வியந்திரங்களின் சராசரி ஆயுட்காலத்தையேனும் பூர்த்திசெய்ய முடியாத வகையில் கொள்வனவு செய்யப்பட்டு குறுகிய காலத்தில் செயலிழந்துள்ளமையால் அக்கொள்வனவு சிக்கனமற்றிருந்தது.

(ஆ) Amoxicillin with clavalanic acid inj 1.2 g ஊசி மருந்துகள் 88,000 அலகுகளைக் கொள்வனவு செய்கையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்திருந்த 2 நிறுவனங்களின் தரம் தொடர்பில் உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக அறிவிக்கப்பட்டு 5 ஆவது குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்நிறுவனத்திலிருந்து ஒன்று ரூபா 142 வீதம் 22000 அலகுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் தரம் குறித்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருந்தமையால் எஞ்சிய இருப்பை கொள்வனவு செய்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் ஆரம்பத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நிராகரித்திருந்த குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து ஒன்று ரூபா 119 வீதம் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த வழங்குனரிடமிருந்து

கொள்வனவு செய்யாமை காரணமாக ரூபா 506,000 மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் நோயாளிகளிற்கும் அத்தொகையால் மேலதிகமாக பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

மீளாய்வாண்டின் இறுதியில் சத்திரசிகிச்சைக் களஞ்சியத்தில் காணப்பட்ட காலாவதியான இருப்பின் பெறுமதி ரூபா 2,113,846 ஆகும். இதில் ரூபா 1,274,516 இருப்பு ஒரு ஆண்டிற்கும் மேலாக காலாவதியாகக் காணப்பட்டது.

## 4.7 ஒப்பந்த கட்டுப்பாட்டுக் குறைபாடுகள்

புதிய கட்டிடத்திற்காக புதிய காற்றுச் சீராக்கியினைக் கொள்வனவு செய்தல்.

---

(i) வைத்தியசாலையின் புதிய கட்டிடத்திற்காக காற்றுச்சீராக்கி முறைமையொன்றை கொள்வனவு செய்தல் ஒப்பந்தம் 150 நாட்களில் பூரணப்படுத்தி ஒப்படைக்கும் அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2012 மார்ச் 12 ஆந் திகதியன்று பூர்த்திசெய்யப்பட வேண்டிய ஒப்பந்தமானது 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 மே 07 ஆந் திகதி வழங்குனர் நிறுவனமொன்றால் தற்போது வைத்தியசாலையிலுள்ள வீலர் இயந்திரத்தினை ஓடக்கூடிய நிலையில் வைத்திருப்பதற்காக டக் லைன் (Duct line) இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்காக ரூபா 1,439,000 மேலதிக வேலை மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு அடிக்கடி மேலதிக வேலை மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வேலை விடயங்கள் ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடங்கியிருக்காமையால் ஒப்பந்தத்தினை பூரணப்படுத்தும் காலம் மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 16,046,539 தொகையான கேள்விப் பெறுமதியில் உள்ளடங்கியிருந்த இரண்டு விடயங்களின் விலை வீதங்களை அளவுத் திட்டத்திலுள்ள விலை வீதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே அளவுத்திட்டத்தினைக் காட்டிலும் ரூபா 796,000 அல்லது 796 சதவீதத்தினாலும் ரூபா 606,000 அல்லது 673 சதவீதத்தினாலும் அசாதாரண விதத்தில் அதிகரித்திருந்தன.

## 4.8 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலையில் காணப்படுகின்ற வாகன தரிப்பிடத்தினை விரிவுபடுத்தும் ஒப்பந்தம்

மேற்படி ஒப்பந்தம் 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு 112 நாட்களில் பூரணப்படுத்தி ஒப்படைக்கும் அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்கான மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 10,008,776 ஆக காணப்பட்டதுடன் (வரி நீங்கலாக) பொறியியலாளர் மதிப்பீட்டில் 8 சதவீதமான ரூபா 1,096,000 தொகையை ஒப்பந்தத்தின் மதியுரைஞராக பணிபுரியும் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், 14 நாட்கள் தாமதித்து 28 நாட்களின் பின்னரே வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தம் கையளிக்கப்பட்டவுடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட வேண்டிய போதிலும், ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு அண்மித்த தினமான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியன்றே உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த வேலைகள் 2013 சனவரி 23 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2013 சனவரி 15 ஆந் திகதி வரை ஒப்பந்தப் பெறுமதியில் 23.8 சதவீதம் அல்லது ரூபா 2,382,950 நிதிப் பெறுமதிகொண்ட வேலைகளே பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(iv) வேலை ஆரம்பித்தல் முற்பணத்தினை செலுத்துகையில் அதில் ரூபா 237,427 வரித் தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(v) இரண்டாவது உப சிட்டையின் படி Reinforcement G (1) இன் கீழான வேலையினை நிறைவேற்றுவதற்காக ஏறத்தாழ 1485 கி.கி. உருக்குக் கம்பிகள் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2283.40 கி.கி. பயன்படுத்தப்பட்டிருந்தது. பொறியியலாளர் மதிப்பீட்டைக் காட்டிலும், 798

கி.கி. மேலதிகமாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 156,680 செலுத்தப்பட்டிருந்தது.

(vi) மதியுரைஞர் கட்டணம் மற்றும் வரி அடங்கலாக ஒப்பந்தக் கிரயம் ரூபா 13 மில்லியனை தாண்டியிருந்ததுடன் அதன் மூலம் மேலும் 50 வாகனங்களை நிறுத்துவதற்கே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன்படி, இச்செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட கிரயத்தினை அதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுடன் ஒப்பிட்டு கிரய பிரதிபலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி ஒப்பந்தக் குறைபாடுகள் மற்றும் தாமதம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக தலைவரினால் பதிலளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வைத்தியசாலைக்காக மென்பொருள் முறைமையொன்றை கொள்வனவு செய்தல்

---

வைத்தியசாலைக்காக மென்பொருள் முறைமையொன்று தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 24,953,859 இற்கு (வரி அடங்கலாக) கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அக்கருமத்திற்கான மதியுரைஞராக மொரட்டுவை பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பவியல் பீடத்தின் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) குறித்த ஒப்பந்தம் 2010 யூலை 19 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதனை 26 வாரங்களில் பூர்த்திசெய்திருக்க வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 மே 10 ஆந் திகதி வரை (148 வாரங்கள்) ஒப்பந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 09 மென்பொருள் பகுதிகளை (modules) தயாரிப்பதற்காக மதியுரைஞரால் ரூபா 23,500,000 பொறியியல் மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரரின் விலை வீதங்களின் படி அதற்கான கிரயம் ரூபா 16,479,080 ஆக காணப்பட்டமையால் பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 7,020,920 அல்லது 30 சதவீதத்தினால் வேறுபட்டிருந்தது.

(iii) ஒப்பந்த வேலைகளை மேற்கொண்டுவரும் சந்தர்ப்பத்தில் வழங்கனரால் நியதிகளின் படி மென்பொருள் பகுதிகள் (modules) வடிவமைக்கப்படுகின்றனவா என்பது குறித்து ஒப்பந்த மதியுரைஞரால் அவதானமாக கண்காணிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) மென்பொருள் முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்காக வைத்தியசாலையால் 200 கணனிகள் 2013 சனவரி 09 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2013 மே 14 ஆந் திகதி வரை அதில் 60 கணனிகள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

**4.9 மனிதவள நிர்வாகம்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கைக்கு இடையே பின்வருமாறு பற்றாக்குறைகள் மற்றும் மேலதிகங்கள் அவதானிக்கப்பட்டன.

| பதவிகள் | அங்கீரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிட பதவியணியினர் | /மேலதிக பதவியணியினர் |
|---|---|---|---|---|
| தாதிகள் பதவியணி | 550 | 527 | 23 | - |
| மாணவ தாதியர் பதவியணி | 300 | 100 | 200 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 121 | 116 | 5 | - |
| ஓடர்லி | 437 | 373 | 64 | - |
| நிரந்தரத் தொழிலாளர் | 25 | 16 | 9 | - |
| அமையத் தொழிலாளர் | - | 28 | - | 28 |
| மருந்தகர் | 20 | 18 | 2 | - |
| மருத்துவ உத்தியோகத்தர்கள் | 144 | 114 | 30 | - |
| வரவேற்பு உத்தியோகத்தர் | 3 | 4 | - | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| தகவல் முறைமைக் கட்டுப்பாட்டாளர் | 1 | - | 1 | - |
| தகவல் தொழில்நுட்பகர் | 3 | - | 3 | - |
| | ---------- | ------------ | ---------- | ---------- |
| மொத்தம் | **1,604** | **1,296** | **337** | **29** |
| | ====== | ====== | ======= | ====== |

## 4.10. ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக நிதியமொன்றை உருவாக்குதல்

நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடை ஏற்பாடாக ரூபா 324,680,882 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குச் சமமான தொகையினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று உரிய காலத்தில் குறித்த நிறுவனங்களிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்திட்டத்திலுள்ள ஒவ்வொரு உபாயத்திற்குமான அடையப்பட வேண்டிய இலக்குகளை காண்பிக்கும் விதத்தில் 2012 ஆம் ஆண்டில் மருத்துவப் பரிசோதனைப் பிரிவினை நவீனமயப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், அது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையின் பௌதீக செயலாற்றல் இலக்குகள் மற்றும் நிதிச் செயலாற்றல் இலக்குகளை தெளிவாகக் காண்பிக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

2012 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 08 கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 கணக்காய்வுக் குழு**

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தது ஒரு ஆண்டிற்கு 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்களேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்காக வைத்தியசாலையில் 3 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) தொழில்சார் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பில் குறித்துரைத்த முறையொன்றைத் தயாரிப்பதற்காக நிபுணத்துவ மருத்துவர்களிடமிருந்து புதிய ஆலோசனைகளைப் பெற்று அதனை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் கலந்தலோசித்தல்.

(ii) கூட்டிணைந்த திட்டத்தின் 4.3.1.1 இல் உத்தேசிக்கப்பட்டிருந்தவாறு பணம் செலுத்தும் வார்ட்களை தனியான ஒரு பிரிவாக இனங்கண்டு திட்டத்திலுள்ள நோக்கங்களின் படி செயற்படுதல் மற்றும் வார்ட்களிற்காக முறையான கிரயமிடல் முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.

**5.5 பாராளுமன்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டாத்தால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்**

2012 செப்தெம்பர் 21 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் வைத்தியசாலைக்கான புதிய வணிகத் திட்டத்தினைத் தயாரித்து அதனை பொது முயற்சிகள் தொடர்பான குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனை நிறைவேற்றுவதற்கு 2013 மே 31 ஆந் திகதி வரை முடியாமல் போயிருந்தது.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான 09 வருமான மற்றும் செலவின விடயங்கள் தொடர்பில் 82 சதவீதம் முதல் 1806 சதவீதம் வரை விலகல்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் படி அவற்றின் மதிப்பிட்டப்பட்ட கிரயங்களை உள்ளபடியான கிரயங்களுடன் ஒப்பிடுகையில் ஒரு உபகரணத்தின் உள்ளபடியான கிரயம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயத்தினைக் காட்டிலும் 140 சதவீதத்தாலும் மற்றைய உபகரணத்தின் உள்ளபடியான கிரயம் 123 இனாலும் மிகைத்துக் காணப்பட்டதுடன் மற்றொரு உபகரணத்தின் உள்ளபடியான கிரயம் 50 சதவீதத்தால் குறைந்து காணப்பட்டது. இதன் படி மதிப்பீட்டுக் கிரயத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாறான பெருமளவு விலகல்கள் காணப்படுதல் அசாதாரண நிலைமையாக காணப்படுவதுடன் மதிப்பீட்டினைத் தயாரிக்கையில் எதிர்வுகூறல் உரிய விதத்தில் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) வைத்தியசாலையின் வருடாந்த சவர்க்காரத் தேவை சராசரியாக 13,980 கட்டிகளாக காணப்பட்ட போதிலும், 2012 ஆம் ஆண்டின் வருடாந்த கட்டளையிடல் 24,000 சவர்க்காரக் கட்டிகளாகும் என மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டில் வைத்தியசாலைக்காக நெனோ கெப் ரக வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த கெப் வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மாதமொன்றிற்கு ரூபா 240,000 ஆக காணப்பட்டதுடன் அதன்படி 09 மாதங்களிற்கான வருமானம் ரூபா 2,160,000 ஆக காணப்பட்டது. மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே ரூபா 1,686,567 வேறுபாடு காணப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 22 சதவீதமான இலக்கு மாத்திரம் அடையப்பட்டிருந்தது.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) சொத்துக்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு

(ஆ) பதவியணியினர் கட்டுப்பாடு

(இ) செலவினக் கட்டுப்பாடு

எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

தலபத்பிட்டிய, நுகேகொடை, இலங்கை

Tel:+9412778610-9   Fax: +94112778661

Email: srijayewardenepurahospital@gmail.com

Web: www.sjghsrilanka.org